## தலைப்பு 423 – மருந்து உற்பத்தி, வழங்கல்கள் மற்றும் ஒழுங்குபடுத்தல் இராஜாங்க அமைச்சு

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

மருந்து உற்பத்தி, வழங்கல்கள் மற்றும் ஒழுங்குபடுத்தல் இராஜாங்க அமைச்சின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் மருந்து உற்பத்தி, வழங்கல்கள் மற்றும் ஒழுங்குபடுத்தல் இராஜாங்க அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் உள்ளடங்கிய பொழிப்பு அறிக்கை 2021 ஆகஸ்ட் 06 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் அமைச்சு தொடர்பான வருடாந்த விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2021 செப்தெம்பர் 21 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இவ் அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களில் இருந்தான தாக்கத்தை தவிர்த்து 2020 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான மருந்து உற்பத்தி, வழங்கல்கள் மற்றும் ஒழுங்குபடுத்தல் இராஜாங்க அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக ஆக்கப்பட்டுள்ளது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமான உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக் கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாகப் பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன், அம்முறைமையின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களில் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன், அதன் பொருண்மை தன்மையை இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்பட வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றை பெற்றுக் கொள்ளும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.
- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும்

சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும், நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம், பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

இந்த அமைச்சு 2020 ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டதனால் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் வழங்கும் தேவை காணப்படவில்லை.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்குகள் சமர்ப்பித்தல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | **வருடாந்த நிதிக்கூற்றுகள்**<br>அரச கணக்குத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டிருந்த 2016 ஆகஸ்ட் 03 திகதிய 250/2016(i) இலக்கம் கொண்ட அரச கணக்கு சுற்றறிக்கையுடனான 06 ஆம் இலக்கம் கொண்ட வழிகாட்டலின் பிரகாரம் வருடாந்த நிதிக்கூற்றுக்கள் 2021 பெப்ரவரி 28 திகதி அல்லது அதற்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் தாமதத்துடன் சிங்கள மொழிப் பிரதி 2021 மார்ச் 10 திகதியும், ஆங்கில மொழிப் பிரதி 2021 ஜூன் 06 திகதி, தமிழ் மொழிப் பிரதி 2021 செப்டம்பர் 17 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன் எனவும், போதியளவு பதவியணியினர் இன்மை மற்றும் கோவிட் 19 தொற்றுநோய் நிலைமை தாமதத்திற்கு காரணமானதெனவும், தமிழ் பிரதி 2021 ஜூலை 31 திகதி அல்லது அதற்கு முன்னர் சமர்ப்பிக்கப்படும் எனவும். | அரச கணக்குத் திணைக்களத்தினால் வெளியிடப்படும் வழிகாட்டலின் பிரகாரம் வருடாந்த நிதிக்கூற்றுக்கள் குறிப்பிட்ட தினத்தில் கணக்காய்விற்கு சமர்ப்பிக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | **அரசாங்க உத்தியோகத்தர் களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று** அரச கணக்குத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டிருந்த 04 இலக்க வழிகாட்டலின் பிரகாரம் விடய இலக்கம் 42301 கொண்ட அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று 2021 பெப்ரவரி 28 திகதி அல்லது அதற்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், அது 02 மாதங்கள் 10 நாட்கள் தாமதத்துடன் 2021 மே 11 திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன் எனவும், போதியளவு பதவியணியினர் இன்மை மற்றும் கோவிட் 19 தொற்றுநோய் நிலைமை தாமதத்திற்கு காரணமானதெனவும் மற்றும் எதிர்காலத்தில் தேவையான பதவியணியினர்களை சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | அரச கணக்குத் திணைக்களத்தினால் வெளியிடப்படும் வழிகாட்டலின் பிரகாரம் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று குறிப்பிட்ட தினத்தில் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டின் போது மருத்துவ வழங்கள் பிரிவில் ஏற்பட்டிருந்த மருந்து வகை குறைவு, காலவதியாதல், தரக் குறைவு மற்றும் மருந்து சேதமடைதல் என்பவற்றின் காரணமாக ஏற்பட்டிருந்த நட்டத்தை கணித்து நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பித்திருந்த குறிப்பு (ii) இனுள் வெளிப்படுத்தப்பட்டிருக்காததுடன், அதற்காக முன்னைய ஆண்டின் போது ஏற்பட்டிருந்த நட்டம் ரூபா 417.02 மில்லியன் தொகை அக்குறிப்பில் உட்படுத்தப்பட்டிருக்கவில்லை. | நிலவுகின்ற கொவிட் 19 தொற்றுநோய் நிலைமை காரணமாக 2020 ஆண்டின் போது அகற்றுதல் மற்றும் காலவதியால் தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை எனவும், அத்தொகைகளை கணித்து 2021 நிதிக் கூற்றுக்களில் உட்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் மற்றும் முன்னைய ஆண்டின் போது இனங்காணப்பட்ட நட்டங்கள் ரூபா 417.02 மில்லியன் தொகை ஏடுகளில் இருந்து பதிவழிப்பதற்கு நிதியமைச்சின் அங்கீகாரம் கிடைத்திருக்காமையால் 2020 நிதிக்கூற்றுக்களில் தொடர்ந்தும் உட்படுத்தப்பட்டிருந்ததென. | மீளாய்வாண்டின் போது ஏற்பட்டிருந்த மருந்து வகை குறைவு, தரக் குறைவு மற்றும் மருந்துகள் சேதமடைவதனால் ஏற்பட்டிருந்த நட்டங்களை கணித்து நிதிக் கூற்றுக்களில் குறிப்பு (ii) இனுள் வெளிப்படுத்த வேண்டும். |
| (ஈ) | ஒதுக்கீட்டுச் சட்டத்தின் படி, விடய இலக்கம் 42301 கொண்ட அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கில் உச்ச செலவு எல்லை ரூபா 13.8 மில்லியன் தொகை எனினும் அவை ரூபா 60 மில்லியன் தொகை எனவும், உச்ச வரவு மீதி எல்லை ரூபா 20 மில்லியன் தொகை எனினும் அதனை ரூபா 130 மில்லியன் தொகை எனவும், ஏஸீஏ – 5 கொண்ட படிவத்திலுள்ள முற்பணக் கணக்கில் உட்படுத்தப்பட்டிருந்தது. | அவதானிப்புடன் இணங்குவதெனவும் எதிர்காலத்தில் அவ்வாறான தாமதங்கள் ஏற்படாமல் இருப்பதற்காக பொறுப்பாக இருப்பேன் எனவும். | நிதிக் கூற்றுகளில் சரியான தகவல்கள் சரியான முறையில் வெளிப்படுத்த வேண்டும். |
| (உ) | மருத்துவ வழங்கல் பிரிவினால் முற்பணப் பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்காமையால் ஒப்பந்த | 2016 ஆகஸ்ட் 03 திகதிய 250/2016(i) இலக்கம் கொண்ட | குறிப்பிட்ட படிவத்தை பயன்படுத்தி முற்பணப் பதிவேடு பேணப்படுவதற்கு |

| | | |
|---|---|---|
| வேலைகளுக்காக செலுத்தியிருந்த முற்பணங்களில் பெறுமதியை இனங்காண முடியாமல் இருந்ததுடன், அப் பெறுமதி ஏஸீஏ – 5(ஏ) மற்றும் ஏஸீஏ – 5(பீ) கொண்ட படிவங்களில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | அரச கணக்குச் சுற்றறிக்கையின் படி முற்பணப் பதிவேடொன்று பேணப்பட வேண்டும் என உரிய உத்தியோகத்தர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டதென. | மற்றும் அதனை நாளதுவரை ஆக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**1.6.2 நிதிச் செயலாற்றல் கூற்று**

நிதிக் கூற்றுக்கள் தொடர்புடைய வருமானம் அல்லாத பெறுவனவுகளை கணக்கீடு செய்யும் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) ஏஸீஏ – 3 படிவத்தின் படி தயாரிக்கப்பட்டிருந்த கட்டுநிதிக் கணக்கின் படி 2020 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு திறைசேரி கட்டுநிதி பெறுவனவுகளின் கூட்டுத்தொகை ரூபா 39,179.44 மில்லியன் தொகை எனினும், நிதிச் செயலாற்றல் கூற்றின் படி அப் பெறுமதி ரூபா 39,279.44 மில்லியன் தொகையாக காணப்பட்டமையால் வித்தியாசம் ரூபா 100 மில்லியன் தொகையாகும். வித்தியாசத்திற்கான காரணத்தை கண்டறிந்து தேவையான சீராக்கல்கள் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | அவதானிப்புகளுடன் இணங்குவதெனவும் மற்றும் வித்தியாசத்திற்கான காரணங்களை கண்டறிந்து பின்னர் சமர்ப்பிப்பேன் எனவும். | திறைசேரி கட்டுநிதி பெறுவனவுகள் மற்றும் ஏனைய பெறுவனவுகள் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். இவ்வாறான வித்தியாசம் ஒன்று ஏற்பட்ட உடனே அதற்கான காரணங்களை கண்டறிந்து தேவையான சீராக்கல்கள் மேற்கொள்ளப்படவேண்டும். |
| (ஆ) ஏஸீஏ – 3 படிவத்தின் படி தயாரிக்கப்பட்டிருந்த கட்டுநிதிக் கணக்கின் படி 2020 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ஏனைய மூல வளங்களின் மூலம் கிடைத்திருந்த ரூபா 166.04 ற்கான பெறுவனவுகள் நிதிச் செயலாற்றல் கூற்றில் உட்படுத்தியிருக்காத காரணத்தினால் வருமானம் அல்லாத பெறுவனவுகள் அந்த தொகையினால் குறைவாக காட்டப்பட்டிருந்தது. | -மேற்படி- | -மேற்படி- |

### 1.6.3 ஆதனங்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| ஏஸீஏ – 6 இலக்கம் கொண்ட படிவத்தில் உள்ள நிதி அல்லாத சொத்துக்கள் தொடர்பான கூற்றின் படி, மீளாய்வாண்டின் போது தனதாக்கி சொத்துக்களின் கிரயம் ரூபா 66.35 மில்லியன் தொகை எனினும், ஏஸீஏ – 2(ii) இலக்கம் கொண்ட படிவத்தில் காணப்படும் நிகழ்ச்சித் திட்டத்தின் செலவுக் கூற்றின் படி மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்கள் ரூபா 128.46 மில்லியன் தொகையாக காணப்பட்டமையால் வித்தியாசம் ரூபா 62.11 மில்லியன் தொகையாகயாக காணப்பட்டது. வித்தியாசத்திற்கான காரணத்தை கண்டறிந்து தேவையான சீராக்கல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | அவதானிப்புக்கள் உடன் இணங்குகின்றேன் எனவும் மற்றும் 2021 ஆண்டிற்கான கணக்குகள் தயாரிக்கும் போது தேவையான சீராக்கல்கள் மேற்கொள்ளப்படும் என. | மீளாய்வாண்டின் போது தனதாக்கிய சொத்துக்களின் கிரயத்தை சரியாக இனங் காண வேண்டியதுடன், இவ்வாறு வித்தியாசம் ஒன்று ஏற்பட்ட போது அதற்கான காரணத்தை கண்டிறிந்து தேவையான சீராக்கல்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 1.6.4 ஆவணங்கள் மற்றும் புத்தகங்கள் பேணப்பட்டிருக்காமை

இராஜாங்க அமைச்சினால் பின்வரும் சில ஆவணங்கள் பேணப்பட்டிருக்காததுடன் சில ஆவணங்கள் முறைப்படி மற்றும் நாளதுவரை பேணப்பட்டிருக்கவில்லை என தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) நிதிப் பிரமாணம் 891(1) பிரகாரம் பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களின் தகவல்கள் உள்ளடக்கி பதிவேடொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | புதிதாக ஆரம்பிக்கப்பட்ட அமைச்சு ஒன்று என்பதால் 2020 ஆண்டிற்காக இப் பதிவேடு ஆரம்பிக்க முடியாமல் போனதெனவும் மற்றும் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது எனவும். | நிதிப் பிரமாணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல் அடங்கக்கூடிய விதமாக பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர் தொடர்பாக பிணைப் பதிவேடு ஒன்று பேணப்பட வேண்டும். |
| (ஆ) நிதிப் பிரமாணம் 110 இன் பிரகாரம் சேதங்கள் தொடர்பான பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | நிதிப் பிரமாணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள படிவத்தின் பிரகாரம் சேதங்கள் தொடர்பான பதிவேடு ஒன்று பேணப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | நிதிப் பிரமாணம் 214 இன் பிரகாரம் பொறுப்புக்கள் தொடர்பான பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | சொத்துக்களை தொடர்ச்சியாக பரிசோதனை மேற்கொள்ளும் விதமாக பதிவேடு ஒன்றில் எழுதப்பட வேண்டும். |
| (ஈ) | நிதிப் பிரமாணம் 1647(உ) பிரகாரம் வாகனங்களை பட்டியலிடும் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் வாகனங்களை பட்டியலிடும் பதிவேடொன்று பேணப்பட வேண்டும். |

### 1.6.5 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இராஜாங்க அமைச்சுக்கு மீளாய்வாண்டின் போது சமர்ப்பிக்கப்பட்ட 19 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு 2021 ஆகஸ்ட் 15 திகதி வரை பதிலனுப்பியிருக்காததுடன் அந்த ஐயவினாக்கள் தொடர்பான கணிக்கக்கூடிய கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி ரூபா 41,091 மில்லியன் தொகையாக காணப்பட்டது. | நிலவுகின்ற கொவிட் தொற்றுநோயின் நிலைமை காரணமாக உத்தியோகத்தர்களின் சேவைக்கு வருதலை வரையறுக்கப்பட்டிருந்தமையால் இந்த தாமதம் ஏற்பட்டதெனவும் மற்றும் எதிர்காலத்தில் தாமதம் இன்றி பதில்கள் விரைவாக கணக்காய்விற்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப் பிரமாணம் 155 இன் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரினால் நிதிப் பிரமாணம் 452(1) இல் குறிப்பிடப்பட்டுள்ள கணக்காய்வு ஐயவினா பதிவேடு குறிப்பிட்ட காலத்துக்கு பின்னர் பரிசோதனை மேற்கொண்டு கிடைத்துள்ள கணக்காய்வு ஐயவினாக்களில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள குறைபாடுகளை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன், அந்த ஐயவினாக்களுக்கு உடனடியாக பதிலனுப்ப வேண்டும். அவ்வாறு பதிலனுப்புதல் முடியாத ஐய வினாக்கள் காணப்படின், அதற்காக இடைக்கால அறிக்கை ஒன்று அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.6.6 கணக்கீட்டு உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்பட வேண்டிய உறுதிப்படுத்தல்

2018 இன் 19 ஆம் இலக்க கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பிரிவு 38 இன் ஏற்பாடுகளின் படி கணக்கீட்டு உத்தியோகத்தர்களினால் பின்வரும் விடயங்கள் தொடர்பாக உறுதிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும் அதன்படி மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான | இந்த இராஜாங்க அமைச்சு 2020 ஆகஸ்ட் 09 திகதி | 2018 இன் 19 இலக்க தேசிய கணக்காய்வு அதிகார |

| | | | |
|---|---|---|---|
| | உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரிக்கப்பட்டு பேணப்படுகின்றதென பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்தவேண்டியிருந்துடன் அம் முறைமையின் ஆக்கபூர்வ தன்மை தொடர்பாக காலத்துக்கு காலம் மீளாய்வு மேற்கொள்ளப்பட்டு அதன்படி முறைமை பயன்தரு விதமாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டியதெனவும், அம் மீளாய்வுகள் எழுத்துமூலம் மேற்கொள்ளப்பட்டு அதன் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், அவ்வாறான மீளாய்வுகள் மேற்கொள்ளப்பட்டதற்கான கூற்றுக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | ஆரம்பிக்கப்பட்டமையால் போதியளவு பதவியணியினர் ஆட்சேர்ப்பதற்கு மற்றும் நிதிக் கட்டுப்பாட்டுக்கான ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை ஒன்று தயாரிப்பதற்கு முடியாமல் போனதெனவும், தற்போது உள்ளகக கட்டுப்பாட்டு முறைமை ஒன்று நிறுவப்பட்டு உள்ளதுடன் அதன் ஆக்கபூர்வ தன்மை தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாண்வு மேற்கொள்ளப்பட வேண்டும். | சட்டத்தின் 38 ஆன் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்பட வேண்டும். |
| (ஆ) | கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு தேவையான விதமாக குறிப்பிட்ட காலப் பகுதியில் அனைத்து கணக்காய்வு ஐயவினாக்களுக்கும் பதிலளித்தல் மேற்கொள்ளப்படுவதென பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரினால் உறுதிப்படுத்த வேண்டியிருந்த போதிலும் அறிக்கையின் 1.5.2(ஊ) பந்தியின் பிரகாரம் கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதிலளித்திருக்கவில்லை. | நிலவுகின்ற கொவிட் தொற்றுநோய் காரணமாக உத்தியோகத்தர்கள் சேவைக்கு வருகை தரல் வரையரையானதால் இந்த தாமதம் ஏற்பட்டதெனவும் எதிர்காலத்தில் தாமதமின்றி நடவடிக்கை எடுக்கப்படுவதெனவும். | -மேற்படி- |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 பொறுப்புக்கள் மற்றும் ஈடுபாட்டுப் பொறுப்புக்களுக்கு நெருங்குதல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2020 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 17 செலவு விடயங்கள் தொடர்பாக ரூபா 128.63 மில்லியனிற்கான பொறுப்புக்கள் திறைசேரியின் பொறுப்புக்கள் கூற்றில் உள்ளடக்கப்பட்டிருக்காததுடன் நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்த குறிப்பு (iii) இல் காட்டப்பட்டுள்ள ஈடுபாட்டுப் பொறுப்புக்கள் கூற்றில் உள்ளடங்கியுள்ள ரூபா 1.56 மில்லியன் தொகைக்கான பொறுப்புக்களுக்குரிய செலவு விடயம் குறிப்பிட்டிருக்கவில்லை. | கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன் எனவும், பதில் பின்னர் அனுப்பப்படும் எனவும். | குறிப்பு (iii) இல் காட்டப்பட்டுள்ள ஈடுபாட்டுப் பொறுப்புக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றில் திறைசேரியினால் வெளியிடப்படும் ஈடுபாட்டுப் பொறுப்புக்கள் கூற்றுடன் இணங்கும் விதமாக தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | குறிப்பு (iii) இல் காட்டப்பட்டுள்ள பொறுப்புக்கள் கூற்றின் படி அத்திகதியில் உள்ளவாறு மருத்துவ வழங்கல் பெறுகைகளுக்காக தனியார் துறை வழங்குனர்களுக்கு செலுத்த வேண்டியிருந்த பொறுப்புக்கள் மற்றும் இலங்கை அரச மருந்தக் கூட்டுத்தாபனத்திற்கு செலுத்த வேண்டிய பொறுப்புக்கள் முறையே ரூபா 5,056.64 மில்லியன் தொகை மற்றும் ரூபா 133,885 தொகை எனினும், அப் பெறுமதிகள் முறையே ரூபா 49.93 மில்லியன் தொகை மற்றும் ரூபா 6.16 மில்லியன் தொகை என திறைசேரியினால் தயாரிக்கப்பட்டிருந்த பொறுப்புக்கள் தொடர்பான கூற்றில் காட்டப்பட்டிருந்தமையால் வித்தியாசம் முறையே ரூபா 5,006.71 மில்லியன் தொகை மற்றும் ரூபா 6.3 மில்லியன் தொகை ஆக காணப்பட்டது. எனினும், வித்தியாசத்திற்கான காரணத்தை கண்டறிந்து தேவையான சீராக்கல்கள் | -மேற்படி- | -மேற்படி- |

மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

| | | | |
|---|---|---|---|
| (இ) | நிதிப் பிரமாணம் 94(2) மற்றும் (3) இன் பிரகாரம் நெருங்கியிருந்த ரூபா 2,601.28 பொறுப்புக்கள் குறிப்பு (iv) இல் காட்டப்பட்டுள்ள பொறுப்புக்கள் தொடர்பாக கூற்றில் உட்படுத்தப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | அனைத்து பொறுப்புக்கள், ஈடுபாட்டுப் பொறுப்புக்கள் தொடர்பாக கூற்றில் உட்படுத்தப்பட வேண்டும். |
| (ஈ) | நிதிப் பிரமாணம் 94(1) இற்கு முரணாக, 07 செலவு விடயங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த ஏற்பாடுகளில் சேமிப்பினை மிகைத்திருந்த ரூபா 108.41 மில்லியனிற்கான பொறுப்புக்களை ஏற்படுத்தியிருந்தது. | கிடைத்திருந்த ஏற்பாடுகள் மீது ஈடுபாட்டுப் பொறுப்புக்களுக்கு நெருங்குவதற்கு முடியுமாக இருந்த அனைத்து சந்தர்ப்பங்களிலும் முயற்சி எடுப்பதுடன், சுகாதார சேவையின் சுபாவத்தின் படி அத்தியவசிய கருமங்களின் போது ஈடுபாட்டுப் பொறுப்புக்களுக்கு நெருங்குவதற்கு நேரிட்டிருந்ததெனவும் மற்றும் எதிர்காலத்தில் அவ்வாறான ஈடுபாட்டுப் பொறுப்புக்களை குறைத்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிதிப் பிரமாணங்களின் படி செயற்பட வேண்டும். |

**2.2 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக் கூற்று**

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிப் பிரமாணம் 485(4) மற்றும் 1993 ஒக்தோபர் 22 திகதிய 89 இலக்கம் கொண்ட அரச தொழில் முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ள உத்தியோகத்தர்களின் கடன் மீதிகள் மூன்று மாதங்களுக்குள் தீர்க்கப்பட வேண்டியிருந்த போதிலும், மருத்துவ வழங்கள் பிரிவிலிருந்த இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ள 15 உத்தியோகத்தர்களின் 2020 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 05 வருட கால எல்லையை மிகைத்திருந்த தீர்க்கப்படாத கடன் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 384,981 தொகையாக காணப்பட்டது. | கடனை தீர்ப்பதற்கு முயற்சி எடுக்கப்பட்டதெனவும் மற்றும் அதற்காக தொடர்ந்து முயற்சி எடுக்கப்படுகின்றதெனவும். | நிதிப் பிரமாணம் மற்றும் சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | சேவையை விட்டுச் சென்றுள்ள 30 உத்தியோகத்தர்களிடம் அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 1.56 மில்லியனிற்கான கடன் மீதிகளை கடன்பட்டோரிம் அல்லது பிணையாளரிடம் அறவீடு செய்வதற்கு 2020 திசெம்பர் 31 திகதி வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இந்த கடன் மீதிகள் கடன்பட்டோர்களிடம் அல்லது பிணையாளர்களிடம் அறவீடு செய்வதற்கு உரிய நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதென. | கடன்பட்டோரிடம் அல்லது பிணையாளரிடம் கடனை அறவீடு செய்வதற்கு அல்லது அதற்கான சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு செயற்பட வேண்டும். |

**2.3 எல்லைகளை மிகைத்தல்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| விடய இலக்க 42301 இலக்கம் கொண்ட அரசாங்க உத்தியோத்தருக்கான முற்பணக் கணக்கு உச்ச வரவு மீதி எல்லை ரூபா 20 மில்லியன் தொகை எனினும் உள்ளவாறான வரவு மீதி ரூபா 41.64 மில்லியன் தொகை ஆக காணப்பட்டமையால் ரூபா 21.64 மில்லியன் தொகையினால் உச்ச வரவு மீதி எல்லையை மிகைத்திருந்தது. உச்ச வரவு மீதி எல்லையை திருத்திக்கொள்வதற்கு அமைச்சு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இராஜாங்க அமைச்சிற்கு சுகாதார அமைச்சின் கீழ் காணப்பட்ட மருத்துவ வழங்கல் பிரிவின் உத்தியோகத்தர்களின் கடன் மீதிகள் சாட்டப்பட்டதன் காரணத்தினால் ஏற்பட்டதாகும் மற்றும் எல்லைகளை திருத்துவதற்காக ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சரவைக்கு கோரிக்கை ஒன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என. | அங்கீகரிக்கப்பட்ட எல்லையுள் செயற்படுதல், எல்லைகளை மிகைப்பதற்கு முன்னர் அங்கீகரிக்கப்பட்ட எல்லைகளை திருத்திக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**2.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மை**

தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுடன் இணங்கியிருக்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காண்பிக்கப்பட்டுள்ளது.

| | அவதானிப்புக்கள் | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| | **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங் களுடன் தொடர்பு** | **இணக்கமின்மை** | | |
| (அ) | 2016 மார்ச் 31 திகதிய 05/2016 இலக்கம் கொண்ட பொது நிதிச் சுற்றறிக்கை | மருத்துவ வழங்கல் பிரிவினால் மீளாய்வாண்டிற்கான வருடாந்த பண்டக் கணிப்பீட்டு அறிக்கை 2021 மே 10 திகதி வரை கணக்காய்விற்கு சமர்ப்பித்திருக்கவில்லை. | நிலவுகின்ற கொவிட் தொற்றுநோய் மற்றும் சில கலஞ்சிய உத்தியோகத்தர்கள் கொவிட் நோயினால் பாதிக்கப்பட்டமையால் இந்த கடமை அலுவல்கள் தாமதம் அடைந்ததெனவும், ஆரம்பிக்கப்பட்டிருந்த | பொது நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | பொதுப் பண்டங்கள் தொடர்பாக கணிப்பீடு தற்போது செயற்பட்டு வருவதுடன் விரைவாக அவ்வறிக்கை வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பேன் என. | |
| (ஆ) | அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் பிரிவு 8.12.3 | பூர்த்தி செய்யப்பட்ட 02 ஒப்பந்த வேலைகள் தொடர்பாக மருத்துவ வழங்கல் பிரிவினால் ஏற்றிருந்த போதிலும் கிரயங்கள் கணிக்கப்பட்டிருக்காத சொத்துக்கள் உரிய முறையில் பொருட் பதிவேட்டில் பதியப்பட்டிருக்கவில்லை. | ஒப்பந்தக்காரர் மற்றும் மருத்துவ வழங்கல் பிரிவின் உத்தியோகத்தர் ஒருவரினால் பண்டங்கள் வழங்ககப்பட்டன மற்றும் பெற்றுக்கொள்ளப்பட்டன என கையொப்பப் பதிவேடு ஒன்று வைக்கப்பட்டுள்ளது என, இந்தப் பண்டங்கள் பொருட் பதிவேட்டில் பதிவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | கொள்வனவு செய்யப்பட்டிருந்த சொத்துக்கள் உரிய முறையில் பொருட் பதிவேட்டில் பதியப்பட வேண்டும். |

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 பணிப்பொறுப்புக்களை நிறைவேற்றாமை

மருந்துகள் பெறுகைக்கான செயல்நடவடிக்கை திட்டம் தொடர்பாக 2012 திசெம்பர் 13 திகதி மேற்கொண்டிருந்த அமப/12/1602/509/005/-11 இலக்கம் கொண்ட அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் மருந்துப் பட்டியல்கள் மீளாய்வுக்குழுவின் பரிந்துரை இன்றி எதுவித மருத்துவ வழங்கலும் கொள்வனவு செய்யக்கூடாது. மீளாய்வாண்டின் போது பட்டியல்கள் மீளாய்வுக்குழு நடாத்துவது தொடர்பாக மற்றும் மருத்துவ வழங்கல் பிரிவினால் மருந்து வகைகள் கொள்வனவு தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோக த்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் மருந்துப் பட்டியல்கள் மீளாய்வுக்குழு வருடாந்தம் நடாத்தப்பட வேண்டியிருந்த போதிலும், 03 வருடங்களுக்கு ஒருமுறை மாத்திரம் அக்குழு நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. 2019 ஜுன் 06 திகதி நடாத்தப்பட அரச கணக்குக் குழுவின் கட்டளையின் படி பட்டியல்கள் மீளாய்வுக்குழு வருடாந்தம் நடாத்த முடியாவிடின் 03 வருடங்களுக்கு ஒருமுறை நடாத்துவதற்காக அமைச்சரவை அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ள வேண்டியிருந்த போதிலும் 2021 மே | 03 வருடங்களுக்கு ஒருமுறை பட்டியல்கள் மீளாய்வுக்குழு நடாத்துவது பொருத்தம் என பரிந்துரைக்கப்பட்டு அமைச்சரவை அங்கீகாரத்திற்காக அமைச்சரவை விஞ்ஞானம் ஒன்று தயாரிக்கப்பட்டிருந்தது எனவும், அதற்கான அங்கீகாரத்தை பெறுவதற்கு முன்னர் தொடர்ந்தும் அதன் சாத்தியக்கூறினை ஆய்வதற்காக அனுப்பப்பட்டுள்ளது எனவும், மற்றும் அதன் பின்னர் தேவையான திருத்தங்களுடன் அமைச்சரவைக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | அமைச்சரவை தீர்மானம் மற்றும் அரச கணக்குக் குழு கட்டளையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 10 வரையும் அவ் அங்கீகாரத்தை பெற்றிருக்கவில்லை. | | |
| (ஆ) | 2019/2020 ஆண்டுகளுக்கான நடாத்தப்பட்ட மருந்துப் பட்டியல் மீளாய்வுக் குழு மற்றும் உப குழுக்களுக்காக அங்கத்தவர்களை நியமனம் செய்தல் 2020 ஆண்டு இறுதி வரை மேற்கொள்ளப்படலும், 2021 ஆண்டின் முதலாவது காலாண்டு வரை 10 உப குழுக்கள் மாத்திரம் நடாத்தப்பட்டிருத்தலும், 2016/2017 ஆண்டுகளுக்காக ஆரம்பிக்கப்பட்ட மருந்துப் பட்டியல்கள் மீளாய்வுக் குழுக் கூட்டங்களின் இறுதி அறிக்கை 2019 ஜனவரி 17 திகதி வெளியிட்டிருத்தலும், அந்த பரிந்துரைகளை செயற்படுத்த வேண்டிய நாட்களை அறுதியாக காட்டப்பட்டிருக்காமை ஆகிய காரணங்களினால் நிச்சயிக்கப்பட்ட கால சட்டகத்தின் படி மருந்து பட்டியல்கள் மீளாய்வுக்குழுக்கள் நியமனம் செய்வதற்கும் செயற்படுத்துவதற்கும் மற்றும் அறிக்கைகள் வெளியிடுவதற்கும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. | பட்டியல்கள் மீளாய்வுக் குழு உரிய முறையில் நடாத்தப்பட்டதென மற்றும் 2020 ஆண்டிற்காக பட்டியல்கள் மீளாய்வுக் குழு கூட்டங்கள் 10 நடத்தப்பட்டதென. | - மேற்படி - |
| (இ) | அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம், முறையான மருந்து முகாமைத்துவம் மற்றும் மருந்து பயன்பாட்டை ஊக்குவிப்பதற்காக அவ்வவ் வைத்தியசாலைகளில் சிகிச்சைக் குழுக் (Therapeutic committee) கூட்டங்கள் மாதாந்தம் முறைப் பிரகாரம் நடாத்தப்பட வேண்டியிந்த போதிலும், 2020 திசெம்பர் 31 திகதி வரை அவ்வாறு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. | 2020 ஆண்டிற்காக 51 சிகிச்சைக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டிருந்ததென, 2021 ஆண்டிற்காக சிகிச்சைக் குழுக் கூட்டங்கள் நடாத்துவது தொடர்பாக எதிர்கால வேலைத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளதென. | - மேற்படி - |
| (ஈ) | மீளாய்வாண்டின் போதும் பயன்படுத்தப்பட்டு வருகின்ற மருத்துவ வழங்கல் விடயங்கள் 20,850 தொகை அவற்றில் மருந்து பட்டியல் மீளாய்வுக் குழுவினால் பரிந்துரைக்கப்பட்டிருக்காத விடயங்களின் எண்ணிக்கை 7,394 தொகை எனப்படும் 35 சதவீதம் ஆகக் காணப்பட்டதெனவும், மருந்து பட்டியல்கள் மீளாய்வுக்குழு | கருத்துத் தெரிவித்திருக்கவில்லை. | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | பரிந்துரை மூலம் அகற்றப்பட்ட சில மருந்து வகைகள் பயன்படுத்தப்பட்டு வருகின்றது என அவதானிக்கப்பட்டது. | | |
| (உ) | 2020 ஜூன் 29 திகதி வரை மீளாய்வாண்டிற்காக மருந்துப் பட்டியல் மீளாய்வுக்குழுவின் அங்கீகாரத்தை பெற்றிருக்காத 258 தொகை மருந்து விடயங்கள் ரூபா 3,507.29 மில்லியன் தொகைக்கு கொள்வனவு செய்வதற்காக மருத்துவ வழங்கல் பிரிவினால் கட்டளைகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. கணினி முறைமையுள் பட்டியல்கள் மீளாய்வுக்குழுவின் அங்கீகாரம் பெற்றிருக்காத விடயம் என காட்டப்பட்டிருந்த ரூபா 285 மில்லியன் கிரயத்தை உடைய 03 விடயங்கள் உட்பட 07 விடயங்கள் 2020 ஆண்டிற்காக மருத்துவ வழங்கல் பிரிவினால் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. | மருந்தின் கூட்டுக் குளிகை மற்றும் வில்லை என வேறுபடல், மருந்துவரை நிராகரிப்புக்களின் அளவு அல்லது கொள்ளளவு (Strength) மாற்றமடைதல் மற்றும் பட்டியலிடப்பட்ட விடயங்கள் தயாரிப்பதற்காக பயன்படுத்தப்படும் மூலப் பொருட்கள் என இருப்பு தொடர் இலக்க விடயம் என பெற்றுக்கொள்ளல் போன்ற காரணங்களினால் மருந்து பட்டியல்கள் மீளாய்வுக் குழுக்களினால் பரிந்துரைக்கப்பட்ட சில மருந்துகள் வேறு தொடர் இலக்கம் ஊடாக மீளாய்வுக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட மருந்துகளுக்கு நேரொத்தாக பயன்படுத்தப்படுகின்றதெனவும், ஏனைய இருப்பு தொடர் இலக்கங்கள் பயன்படுத்தப்பட்ட போதிலும் அவ்விடயம் மருந்துப் பட்டியல்கள் மீளாய்வுக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட விடயங்களை சேர்ந்த அந்த செயற்படுகளுக்கு சமனான விடயங்கள் ஆக இருந்ததெனவும், அந்த விடயம் அவ் மருந்து மீளாய்வுக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட (Formulary Approved) விடயம் என கணினி முறைமையுள் காட்டப்படுவதில்லை எனவும், சில விடயங்கள் மருந்துப் பட்டியல் மீளாய்வுக் குழுவினால் அகற்றப்பட்ட பின்னரும் விஷேடத்துவமான நோய்களுக்கு பயன்படுத்தப்படுகின்றதெனவும், அவ்வாறான விடயங்கள் மீண்டும் மருந்துப் பட்டியல் மீளாய்வுக் குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்கு நேரிடுகின்றது எனவும் மற்றும் நோயாளிகளின் உயிரைப் பாதுகாப்பதற்காக அவ்வாறு செயற்படுவதற்கு நேரிடுகின்றது எனவும், | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | மருந்து பட்டியல்கள் மீளாய்வுக்குழுவின் அங்கீகாரத்தை பெற்றிருக்காத ரூபா 9.07 மில்லியன் தொகைகான 49 மருந்து விடயங்கள் மற்றும் ரூபா 200,400 தொகைக்கான Uirusolve + EDS 6 லீற்றர்கள் முறையே ரிஜ்வே சீமாட்டி சிறுவர் வைத்தியசாலை மற்றும் பேராதனை போதனா வைத்தியசாலையினால் மீளாய்வாண்டின் போது உள்நாட்டு சந்தையிலிருந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. | விஷேடத்துவ மருத்துவர்களின் கோரிக்கை மீது உள் நோயாளர்கள் மற்றும் வெளி நோயாளர்களுக்காக இந்த மருந்துகள் கொள்வனவு செய்திருந்ததெனவும், எதிர்காலத்தில் இந்த மருந்துகள் அடிக்கடி கொள்வனவு செய்ய நேரிடும் எனின், மருந்துப் பட்டியல்கள் மீளாய்வுக்குழுவின் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும். | - மேற்படி - |

### 3.2 ஏனைய அவதானிப்புக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோக த்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மருத்துவ வழங்கல் பிரிவு அமைந்துள்ள தலைமை அலுவலக வளவின் இடவசதியின் 1/3 ஐ விட கூடிய பகுதி அலுவலக விடயங்களுக்காக பயன்படுத்தப்பட்டிருந்தமையால் களஞ்சிய இடவசதிகள் மற்றும் தேவையான உட்கட்டமைப்பு வசதிகள் போதியளவிதாக காணப்படவில்லை என அவதானிக்கப்பட்டதுடன், களஞ்சியக் காப்பாளரினால் பெற்றுக்கொண்டிருக்காத ரூபா 284.27 மில்லியன் கிரயத்தை உடைய மருத்துவ வழங்கல் இருப்பு விடயங்கள் 09 தொகை உட்பட 15 விடயங்கள், 03 நாட்கள் முதல் 71 நாட்கள் வரையான காலம் களஞ்சிய வளவுக்கு வெளியே வைக்கப்பட்டிருந்தது.<br>30 பாகை செல்சியஸ் மற்றும் அதை விட குறைவான வெப்பநிலையில் களஞ்சியப்படுத்தப்பட வேண்டிய ரூபா 120.29 மில்லியன் தொகை கிரயத்தை உடைய 05 மருந்து விடயங்கள் 30 பாகை செல்சியஸை விட கூடிய வெப்பநிலையுடன் தாழ்வாரத்தில் மற்றும் களஞ்சியங்களில் வைக்கப்பட்டு காணப்படுகின்றனெ | களஞ்சியப் பிரிவில் இட வசதியின்மையால் இருப்புக்களை அரச மருந்தக கூட்டுத்தாபனத்திற்கு திருப்பி அனுப்பும் போது அக் கொள்களன்களுக்கான தாமதக் கட்டணம் செலுத்துவதை தவிர்ப்பதற்காக தாழ்வாரத்தில் மருந்து இருப்புக்களை களஞ்சியப்படுத்தி, களஞ்சியத்தில் வைப்பதற்கு இடவசதி கிடைத்தவுடன் களஞ்சியப் பகுதியினால் அப் பொருட்கள் பெற்றுக்கொள்ளப்படுகின்றது எனவும், களஞ்சியப் பிரிவில் காணப்படும் இருப்புக்களை தாழ்வாரத்தில் காணப்படும் போது மருத்துவ வழங்கல் பிரிவின் நிலுவை மருந்துகள் கிடைத்த போது அவ் இருப்புக்களை பெற்றுக்கொள்வதற்காக முக்கியத்துவம் வழங்கப்படுவதனால் மேற்கூறிய இருப்புக்களை பெற்றுக்கொள்ளல் தாமதப்படுகின்றன எனவும், கொவிட் 19 தொற்றுநோய் காரணமாக நோயாளிகள் வைத்தியசாலைகளுக்கு வருதல் குறைவடைந்திருந்தமையால் மருந்துகள் | மருத்துவ வழங்கல்கள் நியம நிலைமையில் களஞ்சியப்படுத்தி வைப்பதற்கும், தீயணைப்பு உபகரணங்களை குறிப்பிட்ட நாட்களில் சேவை செய்வதற்கும், குறிப்பிட்ட ஒப்பந்த அலுவல்களை விரைவாக பூர்த்தி செய்வதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

2021 மார்ச் 17 திகதி மருத்துவ வழங்கல் பிரிவில் மேற்கொள்ளப்பட்ட பௌதீக கணக்காய்வு பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது. குறிப்பிட்ட வெப்பநிலையில் வைக்கப்பட்டிருக்காத காலம் 02 நாட்கள் மற்றும் 71 நாட்களுக்கு இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டது. இந்த மருந்து வகைகளில் ஒவ்வாமை, நீரிழிவு நோய்க்காக பயன்படுத்தப்படும் மருந்து மற்றும் நுண்ணுயிர் எதிர்ப்பிகள் காணப்பட்டதென அவதானிக்கப்பட்டது.

மேலும் மருந்துகள், அறுவைச் சிகிச்சைக் பொருட்கள் மற்றும் இரசாயன பொருட்கள் காணப்படும் களஞ்சிய வளவில் பொருத்தப்பட்டிருந்த தீயணைக்கும் உபகரணங்கள் 2018 ஆண்டு முதல் காலவதியாகியிருந்தது.

அதேபோல் 2013 ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்த ஒப்பந்தப் பெறுமதி ரூபா 119.3 மில்லியன் தொகைக்கான வாயு சீராக்கல் முறைமை பொருத்துதல் மற்றும் திருத்த வேலைகளை மேற்கொள்ளல் ஒப்பந்த உடன்படிக்கையின் படி 2016 ஒக்தோபர் 31 திகதி அளவில் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் ஒப்பந்த வேலைப் பெறுமதியில் 99.78 சதவீதம் எனப்படும் ரூபா 119.03 மில்லியன் தொகை 2021 மார்ச் 17 திகதி வரை ஒப்பந்தக்காரருக்கு செலுத்தப்பட்டிருந்த காரணத்தினால் 2021 ஜுன் 30 திகதி வரையும் ஒப்பந்தக்காரரினால் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்காததுடன், அதற்கான ஆர்வமும் காட்டியிருக்கவில்லை.

(ஆ) பெறுகை செய்முறையில் தாமதம், தாமதமாக வழங்கல்கள் மேற்கொள்ளல் அல்லது ஏனைய காரணங்களினால் ஏற்படுகின்ற மருத்துவ வழங்கல் தட்டுப்பாடுகளை தவிர்ந்துகொள்வதற்காக உள்நாட்டு சந்தையில் இருந்து மருத்துவ வழங்களை கொள்வனவு செய்தமையினால் மேற்கொள்ள நேரிடுகின்ற மேலதிக கிரயம் வழங்குனர்கள் உட்பட பொறுப்பு விநியோகிக்கப்படாமையினால் இருப்புக்களை பெற்றுக்கொள்வதில் இவ்வாறான சிக்கல் நிலைமை ஏற்படுகின்றதெனவும், மற்றும் இந்த நிலைமையை தவிர்த்துக்கொள்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது எனவும்.

| | | |
|---|---|---|
| சொல்ல வேண்டிய தரப்பினரிடம் அறவீடு செய்தல் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | | |
| (i) 2007 ஆண்டு முதல் 2016 ஆண்டு வரையான 10 வருட காலப்பகுதியில் ரூபா 5,166 மில்லியனிற்கான மேலதிக கிரயம் ஒன்றை மேற்கொள்ள நேரிட்டிருந்ததென மருத்துவ வழங்கல் பிரிவினால் இனங்கண்டிருந்த போதிலும் அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்தினால் இனங்கண்டிருந்த மேலதிக கிரயம் ரூபா 4,941 மில்லியன் தொகையாக காணப்பட்டது. அந்த ரூபா 225 மில்லியனிற்கான வித்தியாசத்திற்கான காரணத்தை இனங்கண்டிருக்கவில்லை. | பெருகை செய்முறைகளின் தாமதம் காரணத்தினால் ஏற்படுகின்ற மருத்துவ வழங்கல் தட்டுப்பாடுகளை தவிர்த்துக்கொள்வதற்காக மருத்துவ வழங்கல் பிரிவினால் உள்நாட்டுச் சந்தையில் இருந்து மருத்துவ வழங்கல் கொள்வனவு செய்தமையால் நேரிட்டிருந்த மேலதிக கிரயம் தொடர்பாக வழங்குனர்களிடம் அறவீடு செய்து மருத்துவ வழங்கல் பிரிவிற்கு அனுப்பும் படி அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளதெனவும், அந்த அறவீடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை எனவும், எவ்வாறாயினும் தற்போது மருத்துவ வழங்கல் பிரிவினால் உள்நாட்டு கொள்வனவுகள் மேற்கொள்ளப்படாமையினால் 2017 ஆண்டு முதல் உள்நாட்டு கொள்வனவுகள் அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்திற்கு சாட்டப்பட்டிருந்தமையால் இந்த நிலைமை தொடர்ந்தும் ஏற்படாது என. | நேரடியாக வழங்குனர்கள் பொறுப்பு சொல்ல வேண்டிய மேலதிக கிரயத்தை அறவீடு செய்தல் தொடர்பாக அவர்களுடன் மேற்கொண்டிருந்த உடன்படிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டியுள்ளதுடன், வழங்குனர்கள் பொறுப்புச் சொல்லத் தேவையில்லாத சந்தர்ப்பங்களில் மேலதிக கிரயம் தொடர்பாக பொறுப்புச் சொல்ல வேண்டிய உத்தியோகத்தர்களின் அந்த மேலதிக கிரயத்தை அறவீடு செய்வதற்காக நடைமுறை ஒன்று அறிமுகப்படுத்த வேண்டும். |
| (ii) அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்தினால் இது வரை அறவீடு செய்வதற்காக இனங் கண்டிருந்த மேலதிக கிரயம் ரூபா 320 மில்லியன் தொகை காணப்பட்டதுடன், மீதியான ரூபா 4,621 மில்லியன் தொகையினை அறவீடு செய்தல் தொடர்பாக மருத்துவ வழங்கல் பிரிவு அல்லது அரச மருந்தகக் கூட்டுத்தாபனம் எதுவித நடவடிக்கையும் எடுத்திருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| (iii) அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்தினால் இது வரை இனங்காணப்பட்ட மொத்த மேலதிக கிரயத்தில் இருந்து நேரடியாக வழங்குனர்கள் | - மேற்படி - | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | பொறுப்பு சொல்ல வேண்டிய ரூபா 194 மில்லியன் தொகையில் இருந்து ரூபா 83 மில்லியன் தொகை மாத்திரம் அறவீடு செய்யப்பட்டிருந்தது. வழங்குனர்கள் பொறுப்புச் சொல்ல வேண்டியிருக்காத கட்டளைகள் சமர்ப்பித்தல் மற்றும் பெறுகை செய்முறைகளின் குறைபாடுகள் காரணமாக மேற்கொள்வதற்கு நேரிட்டிருந்த ரூபா 104 மில்லியன் தொகை மற்றும் மேலும் ரூபா 21.8 மில்லியன் தொகை தொடர்பாக பொறுப்புச் சொல்ல வேண்டியவர்களை இது வரை இனங்கண்டிருக்கவில்லை. | | |
| (iv) | 2018 ஆண்டு முதல் 2020 ஆண்டு வரையான காலப்பகுதியில் பெறுகை செய்முறையில் தாமதம் காரணமாக ஏற்பட்டிருந்த மருத்துவ வழங்கல் தட்டுப்பாட்டினை தவிர்த்துக்கொள்வதற்காக அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்தினால் 57 சந்தர்ப்பங்களில் மேற்கொண்டிருந்த உள்நாட்டு கொள்வனவுகளின் போது ஏற்பட்டிருந்த மிகை கிரயம் ரூபா 558 மில்லியன் தொகையினை இந்த அறிக்கை திகதி வரை அறவீடு செய்திருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| (v) | ஒவ்வொரு வைத்தியசாலைகளினாலும் உள்நாட்டு சந்தையிலிருந்து கொள்வனவு செய்யும் மருத்துவ வழங்கல்களுக்காக செலவிடப்படும் மேலதிக கிரயத்தை வழங்குனர்களிடம் அறவீடு செய்வதற்காக நடைமுறை ஒன்று இனங்கண்டிருக்கவில்லை. மீளாய்வாண்டின் போது வரிசை அமைச்சின் கீழுள்ள அரசாங்க வைத்தியசாலைகள் மற்றும் 35 சுகாதார நிலையங்கள் இனால் ரூபா 2,219,148,518 தொகை | - மேற்படி - | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | கிரயத்திற்கான மருந்து வழங்கல் உள்நாட்டு சந்தையில் இருந்து கொள்வனவு செய்திருந்த போதிலும் அதற்கான மேலதிக கிரயத்தை கணித்து அறவீடு செய்திருக்கவில்லை. | | |
| (இ) | மருத்துவ வழங்கல் பிரிவினால் அரசாங்க வைத்தியசாலைகளுக்கு வழங்கியிருந்த மருத்துவ வழங்கல்களின் கிரயம் ரூபா 1,136.64 மில்லியன் தொகைக்கான மருத்துவ வழங்கல்கள் தரம் குறைந்தனவாக காணப்பட்டன. தரக்குறைவு என வைத்தியசாலைக்கு அறிவிக்கும் சந்தர்ப்பத்தில் மீதியான மருத்துவ வழங்கல் தொகை எவ்வளவு என இனங்கண்டிருக்கவில்லை. | 2020 ஆண்டின் போது தரக்குறைவு சம்பந்தமாக 80 சுற்றறிக்கைகள் வெளியிடப்பட்டன என, 2015 ஆண்டு முதல் தரக் குறைவான மருந்துகளின் மொத்த தொகுதிக்கும் அறவீடு மேற்கொள்ளப்படுவதனால் வைத்தியசாலைகளில் காணப்படும் மீதி இருப்பு எண்ணிக்கையை கணித்தல் மேற்கொள்ளப்படுவதில்லை எனவும், கணினி முறைமை பன்முகப்படுத்தப்பட்டுள்ளது தள வைத்தியசாலைகள் மட்டம் வரை ஆகும் எனவும் மற்றும் அந்த வைத்தியசாலைகளின் களஞ்சியத்திலிருந்து அவ்வவ் அலகுகளுக்கு வழங்கப்பட்ட பின்னர் அந்த இருப்பினையும் கணினி முறைமையின் மூலம் கணிக்க முடியாது எனவும். | மருத்துவ வழங்கல்கள் பெற்றவுடன் மாதிரியொன்றின் தரத்தினை பரிசோதனை மேற்கொள்ளக்கூடியவாறு நடைமுறை ஒன்றினை அறிமுகப்படுத்தி செயற்படுத்த வேண்டியதுடன், அதற்காக போதிய வசதிகள் மற்றும் பதவியணியினர் பேணப்பட வேண்டும். தரக்குறைவான மருந்து வழங்கல்களின் கிரயம் மற்றும் நிருவாகக் கட்டணம் குறிப்பிட்ட வழங்குனர்களிடம் அறவிடப்பட வேண்டியதுடன், அதற்காக இயலாமை ஒன்று காணப்படின் அதற்கான காரணத்தினை கண்டறிந்து பொறுப்புச் சொல்ல வேண்டிய உத்தியோகத்தரிடம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | தரக்குறைவான மருத்துவ வழங்கல்கள் இடையே அனேகமானவற்றில் கண்ணாடித் துண்டுகள் காணப்பட்டமை, கற்புலனாகும் சிறு துணிக்கைகள் காணப்படல், இறந்த கரப்பாண்கள் காணப்படல், மாத்திரைகள் உடைந்திருத்தல், வர்ணங்கள் வித்தியாசப்படல், பிரித்தானிய மருந்தியல் விவரக் குறிப்புக்களுடன் இணங்கியிருக்காமை (does not confirm to BP specification), பிரதிகூலமான எதிர்தாக்கங்கள் காரணமாக 03 இறப்புக்கள் நேரிட்டிருத்தல், நுண்ணுயிர் மாசுபாடு (Microbial Contamination) ஆகிய | அவதானிக்கப்பட்ட குறைபாட்டு நிலைமை பரிசோதனை எண்ணிக்கையை அதிகரிப்பதன் மூலம் மாத்திரம் தவிர்த்தல் நடைமுறைச் சாத்தியமாக காணப்படாது எனவும், தரக்குறைவான மருந்துகளை நோயாளிகளுக்கு வழங்கப்படுவதை குறைப்பதற்காக அவ்வாறான குறைபாடுகள் குறைந்த சிறந்த உற்பத்திகளை பயன்படுத்துதல்களை கடைபிடித்தல் தொடர்பாக சான்றிதழ் உடைய (GMP Certificates) உற்பத்திகளை மாத்திரம் பெற்றுக்கொள்ள | - மேற்படி - |

விடயங்கள் இனங்கண்டிருந்ததுடன், அக் காரணத்தினால் பயன்படுத்துவதில் இருந்து அகற்றப்பட்டிருந்த அல்லது பயன்படுத்துதல் இடைநிறுத்தப்பட்டிருந்தது.
மீளாய்வாண்டின் போது தரக் குறைவு என பயன்பாடிலிருந்து அகற்றப்பட்டிருந்த மருத்துவ வழங்கல்கள் இடையே நுண்ணுயிர்க்கொல்லி மருந்துகள் (Meropenem/Flucloxacillin Vancomycin), ஒவ்வாமை, தொய்வு மற்றும் புற்றுநோய் ஆகியவற்றிக்கு பயன்படுத்தும் மருந்துகளாகும்.

வேண்டும் எனவும், உற்பத்தி முதல் வழங்களை பெற்றுக்கொள்ளல் வரை உற்பத்தியில் ஏற்படுகின்ற குறைபாடுகள் மாத்திரம் தரப் பரிசோதனை மூலம் இனங்காணக்கூடியதாக உள்ளதெனவும், இருப்பு களஞ்சியப்படுத்தல், போக்குவரத்து மற்றும் நெறிப்படுத்தல் பலவீனம் காரணமாக ஏற்படுகின்ற குறைபாடு தரப் பரிசோதனை மூலம் இனங்காண முடியாது எனவும், 2020 ஜூன் மாதத்திற்கு முன்னரான காலப் பகுதியில் மருந்துகள் வழங்குவதற்கு முன்னர் மருந்துகளின் தரப் பரிசோதனை மேற்கொள்ளும் நடைமுறை ஒன்று செயற்பட்டிருக்காத போதிலும் அதன் பின்னர் மருத்துவ வழங்கல் பிரிவிற்கு கிடைக்கும் மருந்துகளை பெற்றுக்கொண்டவுடன் பல தொகுதிகளில் இருந்து மாதிரிகள் பெற்றுக்கொண்டு அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்தின் ஆய்வுகூடத்திற்கு அனுப்பி பரிசோதனை மேற்கொள்ளும் நடைமுறை ஒன்று ஆரம்பிக்கப்பட்டதெனவும், 07 நாட்களுக்குள் இந்த பரிசோதனை அறிக்கை கிடைப்பதுடன், அது வரை அத் தொகுதிகளை வழங்காமல் இருப்பதுடன், தரக்குறைவானது எனின் அதனை உறுதிப்படுத்துவதற்காக மீண்டும் அத்தொகுதியில் மாதிரி ஒன்று தேசிய மருந்துவகை தர ஆய்வு கூடத்தில் அனுப்பப்படுகின்றது எனவும், தரக்குறைவு ஏற்படின் அந்த அறிக்கை தேசிய மருந்து ஒழுங்குபடுத்தும் அதிகார சபைக்கு சமர்ப்பித்து அதன் பரிந்துரையை பெற்று பயன்படுத்துதலை இடை நிறுத்துவதற்கும் அல்லது பயன்படுத்துவதில் இருந்து அகற்றுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என, 2020

| | | | |
|---|---|---|---|
| | | ஜூன் மாதம் முதல் இது வரை 193 மாதிரிகள் அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது எனவும், அவற்றில் 45 மாதிரிகள் தரக் குறைவானவையாக காணப்பட்டமையால் மீண்டும் உறுதிப்படுத்துவதற்காக மருந்து வகை தர ஆய்வுகூடத்திற்கு அனுப்பிய பின்னர் 28 மருந்துத் தொகுதிகள் தரக்குறைவானவை என உறுதிப்படுத்தப்பட்டமையால் அவற்றை பயன்படுத்துவதில் இருந்து அகற்றப்பட்டது எனவும், 316 மருந்து வகைகள் பரிசோதனை செய்வதற்காக மாத்திரம் அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்தின் வசதிகள் காணப்படுவதனால் தேசிய மருந்து ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் மூலம் அநேகமான மருந்து வகைகள் பரிசோதனை செய்வதற்கு திட்டங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன எனவும், | |
| (உ) | வைத்தியசாலைகளுக்கு மருந்துகள் வழங்கப்பட்ட பின்னர் தரக்குறைவானவை என அறிந்தது தொடர்பாகவும் தரக்குறைவான மருந்துகள் தொடர்பாக சுற்றறிக்கை வெளியிடும் சந்தர்ப்பம் வரை அவை நூற்றிற்கு 100 சதவீதம் நோயாளிகளுக்கு வழங்கப்பட்டு அல்லது பயன்படுத்தப்பட்டு தீர்ந்திருத்தல் தொடர்பாகவும், பயன்படுத்தலை இடை நிறுத்துவதற்கு (withhold) கட்டளை இடப்பட்ட விடயம் தொடர்பாக மேலதிக பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு பயன்பாட்டிலிருந்து அகற்றுவதற்கு (Withdraw) அல்லது மீண்டும் பயன்படுத்துவதற்கு (Revoke) கட்டளை வழங்குவதற்கு முன்னர் அவ்விடயம் இயல்பாகவே காலவதியாவதற்கு நேரிடுதல் தொடர்பாகவும், பரிசோதனை விடயங்கள் தாமதம் அடையும் காரணத்தினால் காலவதியாகும் விடயங்களுக்காக வழங்குனர்களிடம் குறிப்பிட்ட நட்டத்தை அறவீடு | தற்போது காணப்படும் தர ஆய்வுகூடத்தில் பரிசோதனை வசதிகள் மற்றும் அவற்றின் இயலளவு போதியளவாக காணப்படாமையால் மருத்துவ வழங்கல் பிரிவிற்கு கிடைக்கும் அனைத்து மருந்து இருப்புக்களின் தொகுதிகளின் மாதிரிகள், இரசாயன பௌதீக மற்றும் உயிரியல் விஞ்ஞான தர பரிசோதனைக்கு உள்ளாக்குதல் நடைமுறைச் சாத்தியமாக காணப்படாததுடன் சில நேரங்களில் கிரயம் செயற்திறனற்ற கருமம் ஒன்றாகும் எனவும் எவ்வாறாயினும் வைத்தியசாலைக்கு வழங்குவதற்கு முன்னர் மருந்து மாதிரிகளை பரிசோதனை செய்யும் நடைமுறையொன்று தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது எனவும். | தரத்தில் உயர்ந்த மருந்து வழங்கல்களை கொள்வனவு செய்வதற்கும், தரப் பரிசோதனையின் பின்னர் மாத்திரம் வைத்தியசாலைக்கு விநியோகிப்பதற்கும் மற்றும் தரக்குறைவான மருந்துகளை வழங்குவதன் ஆபத்து நிலைமை அகற்றுவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும் தரக்குறைவானது என தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்ட மருந்துகளை விரைவாக பரிசோதனை மேற்கொள்ளும் நடைமுறை ஒன்று செயற்படுத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செய்யும் சந்தர்ப்பத்தை இழந்திருத்தல் தொடர்பாகவும் தொடர்ச்சியாக கணக்காய்வு அறிக்கைகளின் மூலம் வெளிப்படுத்தியிருந்த போதிலும் இவ்வறிக்கை திகதி வரை அந்த நிலைமைகளை தவிர்த்துக் கொள்வதற்காக மருந்துகளை வைத்தியசாலைகளுக்கு வழங்குவதற்கு முன்னர் தரப் பரிசோதனை மேற்கொள்ளும் நடைமுறை ஒன்று செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. | | |
| (ஊ) | தரக்குறைவான மருந்துகள் தொடர்பான அறிவிக்கும் சுற்றறிக்கை வெளியிடுவதில் தாமதத்தின் காரணமாக தரக்குறைவான மருந்துகள் நோயாளிகளுக்கு வழங்குவதை தவிர்க்கும் குறிக்கோளுடன் 2020 ஆண்டு முதல் கணினி முறைமை மூலம் மருத்துவ வழங்கல் பயன்படுத்துவதை இடைநிறுத்தும் கட்டளை குறிப்பிட்ட வைத்தியசாலைகள் மற்றும் நிறுவனங்களும் அறிவிக்கப்படுகின்றதென கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் 1,521 கணினி முறைமைகளை கொண்ட ஒட்டுமொத்த வைத்தியசாலை முறைமையின் 1,381 வைத்தியசாலைகளில் நிறுவப்பட்டிருக்காமையால் அக்குறிக்கோளினை அடைந்துகொள்வதற்கு முடியாமல் இருந்தது. | 2021 திசெம்பர் 31 திகதியளவில் 570 பிராந்திய வைத்தியசாலைகளுக்காக கணினி முறைமை (MSMIS) தொடர்பு வழங்குவதற்கு தேவையான திட்டம் தயாரிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டிருந்தது என. | தரக்குறைவான மருந்து தொடர்பாக கட்டளை வழங்குவதற்கு PRONTO கணினி முறைமை பயன்படுத்தப்பட வேண்டும். |
| (எ) | மீளாய்வாண்டின் போது ரூபா 14.38 மில்லியன் கிரயத்தை உடைய தரக் குறைவான 13 வகையான மருந்துகளின் 609,561 தொகை அலகுகள் பொலன்னறுவை மாவட்ட பொது வைத்தியசாலைக்கு கிடைத்திருந்துடன், அவற்றில் 529,443 அலகுகள் அதாவது சுமார் 86.85 சதவீத நோயாளிகளுக்கு வழங்கப்பட்டிருந்தன. எனினும், அந்த மருந்துகளை பயன்படுத்தி நோயாளர்கள் தொடர்பாக பரிசோதனைகள் ஏதும் அல்லது விசாரணை ஒன்று மேற்கொண்டிருக்காததுடன் | தரங் குறைந்த மருந்துகளை பயன்படுத்திய நோயாளர் தொடர்பாக பரிசோதனை மேற்கொள்ளும் நடவடிக்கை முறைமை ஒன்று இதுவரை அறிமுகப்படுத்தியிருக்கவில்லை எனவும், மற்றும் மருத்துவ வழங்கல் பிரிவிற்கு கிடைக்கும் மருந்து வகைகள் விநியோகிக்கும் முன்னர் தரப் பரிசோதனை மேற்கொள்வதற்காக (உ) பதிலில் குறிப்பிடப்பட்டுள்ள நடைமுறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது என. | தரக் குறைவான மருந்துகளை நோயாளர்களுக்கு விநியோகிக்க முன்னர் அவை தரக் குறைவானவை என இனங் காண்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | களஞ்சியத்தில் மீதியாக காணப்பட்ட தரங்குறைந்த மருந்துகள் தொடர்பாக மாத்திரம் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் அவ்வவ் சுற்றறிக்கைகளின் மூலம் அறிவிக்கப்பட்டிருந்தது. | | |
| (ஏ) | சிறுநீரக நோயாளர்களுக்கு வழங்கப்படுகின்ற Peritoneal Dialysis Solution 1.5% ஆகிய மருந்தின் 05 தொகுதிகளின் கீழ் ரூபா 6.47 மில்லியன் தொகை கிரயத்தை உடைய 7,100 அலகுகள், அவதானிப்பு மேற்கொள்ளப்பட்ட சந்தர்ப்பத்தில் பொலன்னறுவை பொது வைத்தியசாலை களஞ்சியத்தில் மீதியாக இருந்ததுடன், இந்த மருந்தின் 8 பொதிகளில் மருந்து கசிந்து காலியாக இருந்ததுடன், நோயாளர்களுக்கு வழங்கப்பட்ட மருந்துகளும் அநேக சந்தர்ப்பங்களில் பொதியிற்கு வெளியே கசிந்து காணப்படுகின்றன என முறைப்பாடுகள் கிடைத்திருந்ததென அவதானிக்கப்பட்டன. | இது தொடர்பாக திணைக்கள விசாரணை ஒன்று மேற்கொண்டு தொடர் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும், உங்களுக்கு பின்னர் அறிவிக்கப்படும் எனவும். | உரிய தரத்திலான மருந்துகளை கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஐ) | பேராதனை போதனா வைத்தியசாலையில் நீண்ட காலம் முதல் மருந்து களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்த தரக் குறைவான (Quality Fail) அறுவை சிகிச்சை நுகர்வுப் பொருட்கள் மற்றும் ஆய்வுகூட பண்டங்கள் 34 விடயங்கள் தொடர்பாக 2009 மே 21 திகதிய WMS-01/13/2009 இலக்கம் கொண்ட சுகாதார அமைச்சுச் செயலாளரின் சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட்டு களஞ்சியத்தில் இருந்து அகற்றுவதற்கு கணக்காய்வு திகதியாகிய 2020 செப்டம்பர் 04 திகதி வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அவதானிப்பு சரியானதெனவும் இலங்கை மருந்தகக் கூட்டுத்தாபத்தினால் கடந்த காலத்தில் தரக் குறைவான மருந்துகள் அப்புறபடுத்தல் தொடர்பாக நடவடிக்கை எடுக்கும் போது ஏற்பட்டிருந்த சிக்கல்கள் காரணத்தினால் அப்புறப்படுத்தல்கள் தாமதம் அடைந்திருந்ததுடன், மற்றும் அப்புறப்படுத்துவது எனவும் விடயங்களை விரைவு படுத்துவதற்கு தேவையான ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன என. | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். |
| (ஒ) | 2004 மற்றும் 2005 ஆண்டுகளின் போது அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்தினால் மருத்துவ வழங்கல் பிரிவிற்கு ஒப்படைக்கப்பட்டிருந்த மருந்து வழங்கல்களின் குறைவு ரூபா 10 மில்லியன் தொகை தொடர்பாக கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை மூலம் வெளிப்படுத்தப்பட்டிருந்தது. இது | 2004 மற்றும் 2005 ஆண்டுகளின் போது அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்தினால் மருந்து வழங்கல் பிரிவிற்கு மருந்துகளை ஒப்படைக்கும் போது ஏற்பட்டிருந்ததென இனங்கண்டிருந்த ரூபா 10 மில்லியன் நட்டத்தினை விசாரணை மேற்கொண்டு பொறுப்பு சொல்ல | ஏற்பட்டிருந்த நட்டத்தை உரிய தரப்பினர்களிடம் அறவீடு செய்வதற்கு அதற்கு இயலாத போது அதற்கான காரணத்தை கண்டறிந்து பொறுப்புச் சொல்ல வேண்டிய உத்தியோகத்தரிடம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க |

| | | | |
|---|---|---|---|
| | தொடர்பாக நியமனம் செய்யப்பட்டிருந்த குழுவின் பரிந்துரை இலக்கம் 4.2 இன் பிரகாரம் நட்டத்திற்கு தொடர்புடைய தரப்பினரிடம் ரூபா 9.37 மில்லியன் தொகையினை அறவீடு செய்வதற்கு அல்லது நட்டத்தை மீளளிப்பு செய்துகொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்த போதிலும் விசாரணை அறிக்கை வழங்கப்பட்டு 08 வருடங்களுக்கு அண்மித்த காலம் கடந்திருந்த போதிலும் அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்தினால் குறிப்பிட்ட தரப்பினரிடம் அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 9.24 மில்லியன் தொகையில் ரூபா 3.18 மில்லியன் தொகை மாத்திரம் அறவீடு செய்யப்பட்டிருந்தது. அறவீடு செய்யப்படாத 6.06 மில்லியனிற்கான மொத்த நட்டத்தில் 65 சதவீதம் மாத்திரமே. அவற்றில் போக்குவரத்து ஒப்பந்தக்காரர்களிடம் அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 3.20 மில்லியன் தொடர்பாக வழக்கு காலவதியாகியிருந்தமையாலும், விடயங்களை வழங்கிய உள்நாட்டு முகவரிடம் அறவிடப்பட வேண்டிய ரூபா 1.71 மில்லியன் தொகைக்கான இருப்பினை வழங்குனர்களுக்கு சமர்ப்பிப்பதற்கு முடியாமல் போனமை, ரூபா 1.05 மில்லியனிற்கான நட்டம் தொடர்பான மருத்துவ வழங்கல் பிரிவின் தாமதங்கள், கோவைகள் அழிந்திருந்தமை மற்றும் காணாமல் போயிருந்தமை போன்ற உத்தியோகத்தர்களின் கவனயீனம் காரணமாக அறவீடு செய்வதற்கு முடியாமல் இருந்தது. | வேண்டியவர்களை தீர்மானிப்பதற்காக பாராளுமன்ற கணக்குக் குழுவின் ஆலோசனையின் படி நியமனம் செய்யப்பட்ட குழுவின் பரிந்துரையின் படி மருந்து வழங்கல் பிரிவின் களஞ்சியக் காப்பாளராகிய திரு. எஸ்.ஜே. லொகுநாரங்கொட அவர்களிடம் ரூபா 133,084 தொகை அறவீடு செய்யும் படி சுகாதார செயலாளர் அறிவித்துள்ளதெனவும், மீதியான ரூபா 9.87 மில்லியன் தொகையினை அறவீடு செய்யும் பொறுப்பு அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்திற்கு சாட்டப்பட்டுள்ளது எனவும், பின்னர் திரு. எஸ்.ஜே. லொகுநாரங்கொட அவர்களை நிரபராதி என விடுவிக்கப்பட்டிருந்தமையால் குறிப்பிட்ட பணம் அறவிடப்படவில்லை என. | வேண்டும். |
| (ஓ) | அரசாங்க வைத்தியசாலைகளில் வழங்கப்படும் மருத்துவ வழங்கல்கள் தட்டுப்பாடுகள் இன்றி வழங்குவதற்கும் இடையறாத மருந்து வழங்கல்களை உறுதிப்படுத்துவதற்கும், 2021 ஆண்டிற்காக அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்திற்கு கட்டளைகள் சமர்ப்பிக்கும் போது அனைத்து மருந்து வழங்களுக்குமாக பாதுகாப்பு இருப்பு ஒன்று உட்பட மொத்த வருடாந்த தேவையும் கட்டளையிடப்பட வேண்டும் எனவும், ஒவ்வொரு கட்டளைகளுக்குமாக | 2021 ஆண்டிற்காக அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்திற்கு கட்டளைகள் சமர்ப்பிக்கும் போது அனைத்து மருத்துவ வழங்கல்களுக்குமாக பாதுகாப்பு இருப்புத் தொகை உட்பட மொத்த வருடாந்த தேவைக்காக கட்டளைகள் இடவேண்டியிருந்த போதிலும், ஒவ்வொரு கட்டளைக்குமாக முன்னைய ஆண்டுகளின் போது கிடைக்க வேண்டியிருந்த இருப்புக்களுக்காக கட்டளை இடல் | மதிப்பீடு மற்றும் உள்ளவாறான நுகர்வு இடையே முரண்களை குறைக்கும் முறையில் நடைமுறைச் சாத்தியமாக மதிப்பீடுகள் தயாரிப்பதற்கும், அதன் அடிப்படையில் கட்டளைகள் சமர்ப்பிப்பதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இதற்கு முன்னைய ஆண்டுகளின் போது கிடைக்க வேண்டியிருந்த இருப்புக்களை கழித்தல் மேற்கொள்ளப்படக் கூடாது எனவும், 2020 ஏப்ரல் 09 மற்றும் 17 திகதிகளில் சுகாதார அமைச்சரின் தலைமையில் நடாத்தப்பட்டிருந்த மீளாய்வுக் குழுக் கூட்டங்களின் போது தீர்மானிக்கப்பட்டிருந்தது. இந்த தீர்மானத்தின் பின்னர் 2021 ஆண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த அனைத்துக் கட்டளைகளும் மீண்டும் 2020 ஏப்ரல் 20 மற்றும் அதற்கு அண்மித்த நாட்களில் திருத்தப்பட்டிருந்ததுடன் இந்த திருத்தங்களின் காரணமாக 2021 ஆண்டின் கட்டளைகள் 2020 ஆண்டிற்கு நேரொப்ப 25 சதவீதம் முதல் 112 சதவீதத்திற்கு இடைப்பட்ட வீச்சினால் அதிகரித்திருந்தது. ஒவ்வொரு மருத்துவ வழங்கல் தேவைகள் தொடர்பாக முறைப்பிரகாரம் பகுப்பாய்வு செய்து எதிர்வு கூறப்பட வேண்டியிருந்த போதிலும் அதற்குப் பதிலாக மேற்கூறிய தீர்மானத்தின் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தமையால் மருத்துவ வழங்கலில் மிகைகள் ஏற்பட்டு எதிர்காலத்தில் காலவதியாகும் போக்கொன்று ஏற்படக்கூடும் என அவதானிக்கப்பட்டது. | மேற்கொள்ளப்படக் கூடாது என சுகாதார அமைச்சினால் தீர்மானிக்கப்பட்டிருந்தமையால் மருத்துவ வழங்கல் பிரிவினால் 2021 ஆண்டிற்காக அனுப்பப்பட்ட கட்டளைகள் மீண்டும் திருத்தப்பட்டது எனினும் முன்னைய ஆண்டிற்காக கிடைக்க வேண்டியிருந்த இருப்புக்கள் கிடைத்தலும் 2021 ஆண்டிற்கான கட்டளை இடப்பட்ட இருப்புக்கள் 02 பகுதிகளாக கிடைக்கக் கூடிய வகையில் நேரசூசி தயாரிக்கப்பட்டிருந்தமையால் இருப்புக்கள் சேகரமாதலின் காரணமாக மிகைத்தலும் 2020 மற்றும் 2021 ஆண்டுகளில் காணப்பட்ட Covid தொற்றுநோய் நிலைமையின் மீது விடயங்களின் நுகர்வு விரைவாக குறைவடைந்தமையால் அந்த கட்டளைகளை இரத்துச் செய்தல் மற்றும் தற்காலிகமாக இடைநிறுத்துவதற்கும் அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்துடன் இணைந்து இருப்புக்கள் மிகைத்தல் மற்றும் காலவதியாதலை தடுத்துக்கொள்வதற்காக உரிய நடவடிக்கைகள் செயற்படுத்தப்பட்டு வருகின்றது என. | |
| (ஔ) | அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்தினால் வழங்கப்படும் மருத்துவ வழங்கல் பொதிகளில் அரச இலட்சினை அச்சிடப்பட்டு இருக்க வேண்டியது கட்டளையின் நிபந்தனை ஒன்றைப் போலவே முறைகேடான பயன்பாட்டை தவிர்ப்பதற்கும் அறிமுகப்படுத்தியிருந்த உள்ளகக் கட்டுப்பாட்டு பொறிமுறை ஒன்றாக இருந்த போதிலும், அரச இலட்சினை இடப்படாத ரூபா 156.28 மில்லியன் தொகை கிரயத்தை உடைய 03 விடயங்கள் 2021 மார்ச் 17 திகதி மருத்துவ வழங்கல் பிரிவின் களஞ்சியங்களில் காணப்பட்டது. | அரச இலட்சினை அச்சிட்டிருத்தல் கட்டளை நிபந்தனை ஒன்றென குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் சில சந்தர்ப்பங்களில் மருத்துவ வழங்கல்கள் அத்தியவசிய காரணங்களினால் அல்லது Covid தொற்றுநோய் நிலைமை காரணமாக ஏற்பட்டிருந்த அசௌகரியங்களை கவனத்தில் எடுத்து அரச இலட்சினை பதியப்படாமல் இருப்புக்களை ஏற்றுக்கொள்ளும் சந்தர்ப்பங்கள் காணப்படுவது எனவும், அவ்வாறு இன்றெனின் இவ்விடயத்திற்காக வழங்குனர்களிடம் அறவீடு செய்வதற்காக அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்திற்கு அறிவிப்பது எனவும். | அரச இலட்சினைகள் அச்சிட்டிருத்தல் கட்டளை நிபந்தனைகளுக்கு உட்படுத்தப்பட்டு அதன்படி நடவடிக்கை எடுப்பதற்கு அறிவுரை வழங்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (க) | பொலன்னறுவ பொது வைத்தியசாலையில் மருந்துகளை களஞ்சியப்படுத்துவதற்காக 06 களஞ்சியங்கள் பேணப்பட்டு வருவதுடன், வைத்தியசாலையை விரிவாக்குவதற்கு ஒப்பாக மருந்துக் களஞ்சிய வசதிகளை அதிகரிக்காமை மற்றும் நிலவும் மருந்து வகைகளுக்கு களஞ்சியங்களில் இடவசதிகள் காணப்படாமையால் ரூபா 44.18 மில்லியன் தொகை பெறுமதியான 82 மருந்து வகைகளை சேர்ந்த 2,062,522 மருந்து அலகுகள் மருந்துக் களஞ்சியங்களுக்கு வெளியே பாதுகாப்பற்ற முறையில் குவிக்கப்பட்டு காணப்பட்டன. பிரதான களஞ்சியத்தின் படிவரிசை மற்றும் அதற்கு அண்மித்த இடங்களில் முறைசாரா விதமாக மற்றும் பாதுகாப்பற்ற முறையில் Disposable Gloves உடைய பெட்டிகள் பாரிய எண்ணிக்கையானவைகள் வைக்கப்பட்டிருந்ததுடன், குறிப்பிட்ட இடைவெளிகள் இன்றி காற்றுப் படாத விதமாக மருந்துகளை களஞ்சியப்படுத்தியிருந்தமையால் வாயுசீராக்கல் செய்யப்பட்ட களஞ்சியத்தினுள் காணப்படும் மருந்துகளுக்கு தேவையான உஷ்ண அளவை விட கூடிய வெப்ப காணப்பட்டதென அவதானிக்கப்பட்டது. | பொலன்னறுவ பொது வைத்தியசாலையின் மருந்துக் களஞ்சியத்தில் போதியளவு இடவசதி காணப்படாமையால் இவ்வாறு பிரதான களஞ்சியத்திற்கு வெளியே இந்த மருந்துகள் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தன எனவும் மற்றும் புதிய மருந்துக் களஞ்சியம் ஒன்று நிர்மாணிப்பதற்கு தேவையான திட்டங்கள் தயாரிக்கப்பட்டள்ளன என | அனைத்து மருந்து வழங்கள்களும் உரிய நியமத்தின் களஞ்சியப்படுத்தி வைப்பதற்கும் அதற்கு தேவையான உட்கட்டமைப்பு வசதிகள் வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ங) | பேராதெனிய போதனா வைத்தியசாலையில் ரூபா 463 மில்லியனுக்கான மதிப்பீட்டுடன் மருந்து களஞ்சியம் ஒன்று நிர்மாணிப்பதற்காக 2017 ஆம் ஆண்டின் போது அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்திருந்த போதிலும் நிர்மாணிப்பதற்கு தேவையான ஏற்பாடுகள் பெற்றிருக்காமையால் தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை. களஞ்சிய வசதிகள் போதியளவாக காணப்படாமையினால் வைத்தியசாலையின் தாள்வாரத்தில், பணிப்பாளரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தின் ஒரு பகுதி மற்றும் மருத்துவ உத்தியோகத்தரின் உத்தியோக பூர்வ வாசஸ்தலத்தின் கீழ் மாடியிலும் மற்றும் | திட்டமிடப்பட்ட மருந்துக் களஞ்சியம் நிர்மாணிப்பதற்காக தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் அங்கீகாரம் கிடைத்துள்ளது எனவும் தேவையான ஏற்பாடுகள் கிடைக்காமையால் நிர்மாண வேலைகள் ஆரம்பிப்பதற்கு முடியாமல் உள்ளது எனவும் மற்றும் எதிர்காலத்தின் தேவையான ஏற்பாடுகள் பெற்றுக் கொண்டு நிர்மாண வேலைகளை ஆரம்பிப்பதற்காக உரிய உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது என. | வைத்தியசாலைகளில் களஞ்சிய வசதிகளை விரிவுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சமயலறையின் ஒரு பகுதியில் போன்ற பல்வேறு இடங்களில் மருந்துகள் மற்றும் அறுவைச் சிகிச்சை நுகர்வுப் பொருட்கள் 44 விடயங்கள் குவிக்கப்பட்டுக் காணப்பட்டதுடன், செல்சியஸ் 25 பாகை முதல் 30 பாகை வரை உஷ்ண வீச்சில் களஞ்சியப்படுத்தப்பட வேண்டி இருந்த 14 மருந்து விடயங்களும் அவற்றில் காணப்பட்டன. | | |
| (ச) | மீளாய்வாண்டின் போது ரிஜ்வே சீமாட்டியார் சிறுவர் வைத்தியசாலையினால் உள்நாட்டு சந்தையில் கொள்வனவு செய்திருந்த மருத்தவ வழங்கள்களின் உள்நாட்டு சந்தை விலை அரச மருந்தக கூட்டுத்தாபனத்தின் விலையை விட வழமையற்ற விதமாக கூடிய உயர்ந்த பெறுமதி ஒன்றினை கொண்டிருந்ததுடன் அவற்றில் 03 மாதங்கள் மற்றும் 11 மாதங்களுக்கு இடைப்பட்ட குறைந்த ஆயுட் காலத்தையுடைய ரூபா 1.37 மில்லியன் கிரயத்திற்கான 16 மருந்து விடயங்கள் காணப்பட்டன. பேராதனை போதனா வைத்தியாலையினால் அவசர கொள்வனவின் கீழ் கொள்வனவு செய்திருந்த விடயங்களின் விலை சுகாதார அமைச்சின் மருத்துவ வழங்கள் பிரிவில் அவ் விடயம் கொள்வனவு செய்யும் சராசரி விலையுடன் ஒப்பீடு செய்யும் போது முரண்கள் 26 சதவீதம் முதல் 2016 சதவீதம் வரையான கூடிய வீச்சொன்றில் காணப்பட்டது என அவதானிக்கப்பட்டது. | இயலுமான அனைத்து சந்தர்ப்பங்களிலும் அரச மருந்தக கூட்டுத்தாபனத்தில் இருந்து மருந்துகள் கொள்வனவு செய்யப்படுகின்றது எனவும் அரச மருந்தக கூட்டுத்தாபனத்தில் மருந்துகள் காணப்படாத சந்தர்ப்பங்களில் சிறு அளவில் கொள்வனவு செய்யப்படுகின்றது எனவும் மற்றும் அங்கு மொத்த விலைகளைகளுக்கு ஒப்பாக கூடிய விலையில் கொள்வனவு செய்யவதற்கு நேரிடுகின்றது என. | உள்நாட்டு கொள்வனவுகளை குறைப்பதற்கும் அத்தியவசியமான சந்தர்ப்பங்களில் வெளிப்படையான தன்மையுடன் நியாய விலைக்கு கொள்வனவு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் இது தொடர்பாக நெருங்கிய மேற்பார்வை செய்வதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஞ) | 2021 ஜனவரி 31 திகதி அளவில் பொலன்னறுவை வைத்தியசாலையில் புற்றுநோய் சிகிச்சையகம் 400 நோயாளிகள் பதிவு செய்யப்பட்டிருந்ததுடன், இந்த சிகிச்சையகத்துக்காக தேவையான மதிப்பீடு செய்யப்பட்ட மருந்துகளில் அனேகமான மருந்து வகைகள் கணிசமான காலம் முதல் சீராக்கி ஒன்று காணப்பட்டது. 2016 ஜனவரி 01 திகதி முதல் 2021 பெப்ரவரி 18 திகதி வரையான 05 வருடங்களை விட கூடிய காலப்பகுதியுள், அந்த | நாளாந்தம் அதிகரித்து வரும் புற்றுநோயாளர்களுக்கு பரிகாரம் செய்வதற்காக நாட்டின் எல்லாப் பிரதேசங்களிலும் புற்றுநோய் நிலையங்கள் காணப்படுவதுடன், அந்த நோயாளர்களின் நாளாந்த மருந்துத் தேவை அதிகரித்து வருகின்றதெனவும், எவ்வாறாயினும் சில புற்றுநோய் மருந்துகள் தேசிய மருந்து ஒழுங்குபடுத்தல் அதிகார சபையில் பதிவு செய்யப்பட்டிருக்காமையால் | அத்தியவசியமான மருந்து வகைகள் தட்டுப்பாடின்றி பேணிச் செல்வதற்கு இயலுமான வகையில் தரவு முறைமை ஒன்று ஏற்படுத்தி அதன்படி அந்த மருந்துகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன், அலகு புற்றுநோயாளர்கள் போன்ற உயிருக்கு ஆபத்தான |

| | | | |
|---|---|---|---|
| | காலப்பகுதியுள் காணப்பட்ட நாட்களில் 50 சதவீத நாட்கள் 12 மருந்து விடயங்களும் 25 – 50 சதவீதங்களுக்கு இடைப்பட்ட பல நாட்கள் 25 மருந்து விடயங்களும் மற்றும் 0 – 25 சதவீதத்திற்கு இடைப்பட்ட நாட்கள் 49 வகையாக மருந்து வகைகள் தட்டுப்பாடாக காணப்பட்டன. புற்றுநோய் போன்ற உயிராபத்து விளைவிக்கக் கூடிய நோய்களுக்கான மருந்துகளுக்கு முக்கியத்துவம் வழங்கி தட்டுப்பாடு இன்றி மருந்துகள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | மருந்துகள் தொடர்ச்சியாக வழங்குவதற்கு தடைகள் ஏற்படுகின்றது எனவும், அதே போல் சில மருந்து வழங்குனர்களினால் கட்டளைகள் உரிய நேரத்தில் வழங்கப்படாமை அல்லது தாமதித்து வழங்கல் ஆகிய காரணங்களினால் மருந்து வழங்கல்களில் தடைகள் ஏற்படுகின்றன எனவும், சில காலப் பகுதிகளில் நிதி நெருக்கடி காரணமாக உரிய நேரத்தில் நாணயப் பத்திரம் வழங்க முடியாமல் போதல் அல்லது வழங்குனர்களுக்கு கொடுப்பனவு தாமதம் அடைவதனால் அல்லது வழங்குதல்களில் தடைகள் ஏற்படும் சந்தர்ப்பங்கள் அறிவிக்கப்பட்டுள்ளது எனவும், எவ்வாறாயினும் தற்போது காணப்படும் நிலைமையில் மருத்துவ வழங்கல் பிரிவு, அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்துடன் இணைந்து புற்றுநோயாளர்களின் தேவைகளுக்காக இயலுமான உச்சமட்ட அளவில் மருந்துகள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றன எனவும், எதிர்காலத்தில் இயலுமான அனைத்து சந்தர்ப்பங்களிலும் அனைத்து நோயாளர்களுக்குமான எல்லா வகையான மருந்துகளும் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நோயாளர்களுக்கான மருந்து வகைகளுக்கேனும் முக்கியத்துவமளித்து செயற்பட வேண்டும். |
| (ட) | சுகாதார அமைச்சினால் ஸ்ரீ ஜயவர்தனபுர வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்ட நோயாளர்களின் சத்திர சிகிச்சைகளுக்காக செலுத்த வேண்டிய தொகை அந்த வைத்தியசாலைக்கு 2014 ஆண்டு முதல் 2021 மார்ச் மாதம் வரை வழங்கப்பட்ட மருத்துவ வழங்கல்களுக்காக அறவிடப்பட வேண்டிய ரூபா 553.28 மில்லியன் தொகைக்கு முறையான அங்கீகாரம் மற்றும் இணக்கம் இன்றி பதிலீடு செய்யப்பட்டிருந்ததுடன் பெறுமதியினை சரியாக கணக்கீடு செய்திருக்கவில்லை. | ஸ்ரீ ஜயவர்தனபுர வைத்தியசாலைக்கு வழங்கப்படும் மருத்துவ வழங்கல்களுக்காக பணம் அறவீடு செய்யாமல் அதற்காக சுகாதார அமைச்சின் அங்கீகாரத்தின் மீது இலங்கை தேசிய வைத்தியசாலை மற்றும் ஏனைய வைத்தியசாலைகளில் இருந்து ஸ்ரீ ஜயவர்தனபுர வைத்தியசாலைக்கு இருதய அறுவைசிகிச்சைக்காக அனுப்பப்படும் நோயாளர்களின் பில் பத்திரங்கள் பதிலீடு செய்யப்படுவது எனவும் அதன்படி 2019 ஜூலை மாதம் வரை மருத்துவ விநியோகப் பிரிவு மற்றும் ஸ்ரீ ஜயவர்தனபுர | இவ்வாறான பதலீடுகளுக்காக திறைசேறியில் இருந்து முறையான அங்கீகாரம் மற்றும் இணக்கம் பெற்றுக்கொள்ள வேண்டியதுடன், கொடுக்கல் வாங்கல்கள் உரிய முறையில் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | வைத்தியசாலையினால் பதிலீடு செய்ய வேண்டிய தொகை தொடர்பாக இணக்கம் ஒன்று ஏற்பட்டிருந்த போதிலும் இதுவரை கொடுப்பனவு மற்றும் பெறுவனவு என பணம் செலுத்தப்பட்டு தீர்க்கப்பட்டிருக்கவில்லை எனவும், எவ்வாறாயினும் எதிர்காலத்தில் ஸ்ரீ ஜயவர்தனபுர வைத்தியசாலைக்கு பணத்திற்கு மருந்துகள் வழங்குவற்கும் அந்த வைத்தியசாலையினால் மேற்கொள்ளப்படும் இருதய சத்திரசிகிச்சைகளுக்காக சுகாதார அமைச்சினூடாக கொடுப்பனவு மேற்கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என. | |
| (ண) | 2011 ஆண்டு முதல் 2020 ஆண்டு வரையான காலப் பகுதியுள் தரக் குறைவான மருந்து வகைகள் மருத்துவ வழங்கல்களின் கிரயம் ரூபா 2,364.70 மில்லியன் தொகை உரிய வழங்குனர்களிடம் அறவீடு செய்திருக்கவில்லை. அவற்றில் அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்திலிருந்து கொள்வனவு செய்தல் ரூபா 2,111.46 மில்லியன் தொகையும், உள்நாட்டுக் கொள்வனவுகள் ரூபா 60.61 மில்லியன் தொகையும், உள்நாட்டு உற்பத்தியாளர்களிடம் கொள்வனவு செய்தல் ரூபா 109.96 மில்லியன் தொகையும், அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்திடம் கொள்வனவு செய்தல் ரூபா 81.95 மில்லியன் தொகையும் மற்றும் அறுவைசிகிச்சை மென்துணி கொள்வனவு செய்தல் ரூபா 732,330 தொகையும் காணப்பட்டது. சில மருத்துவ வழங்கல்கள் தரக் குறைவானவை என சுற்றறிக்கை வெளியிடும் சந்தர்ப்பம் வரை காலவதியாகி இருந்த காரணத்தினால் தரக்குறைவின் காரணமாக ஏற்பட்டிருந்த நட்டத்தை அறவீடு செய்ய முடியாமல் இருந்தது. அதற்கு உதாரணம் ஒன்றாக ரூபா 5.80 மில்லியன் தொகைக்கு Cefuroxime sodium for injection BP 750 mg, 108,000 தொகை தரக்குறைவானவை என சுற்றறிக்கை வெளியிடும் | 2016 ஆண்டு முதல் 2020 ஆண்டு வரையான காலப்பகுதியில் தரக்குறைவான மருத்துவ விநியோகங்களுக்காக வழங்குனர்களிடம் ரூபா 779,648,623 தொகை அறவீடு செய்யப்பட்டிருந்ததெனவும், மற்றும் தரக்குறைவான அறுவைச்சிகிச்சை மென்துணிக்காக வழங்குனர்களிடம் அரவீடு செய்யப்படாமல் இருப்பது பொருத்தம் என மருந்து உற்பத்தி மற்றும் வழங்கல் ஒழுங்குபடுத்தல் இராஜாங்க அமைச்சின் செயலாளரினால் தீர்மானிக்கப்பட்டிருந்ததென. | தரக்குறைவான மருத்துவ வழங்கல்களின் கிரயம் மற்றும் நிருவாகக் கட்டணம் உரிய வழங்குனர்களிடம் அறவீடு செய்யப்பட வேண்டியதுடன், அதற்கு இயலாதெனின் அதற்கான காரணத்தை கண்டறிந்து பொறுப்பு சொல்ல வேண்டிய உத்தியோகத்தர்களிடம் அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

சந்தர்ப்பத்திற்கு முன்னர் 2017 செம்டம்பர் 30 திகதி மற்றும் 2018 ஜனவரி 31 திகதி ஆகிய தினங்களில் காலவதியாகியிருத்தலை சுட்டிக்காட்டலாம்.

**3.3 உள்நாட்டு நிதியங்களில் இருந்து செயற்படுத்தப்பட்டுள்ள செயற்திட்டங்கள்**

மருத்துவ வழங்கல் பிரிவினால் 2012 ஆண்டிற்கு முன்னர் ஒரகல் எனப்படும் கணினி முறைமையை பயன்படுத்தி மருத்துவ வழங்கல் அலுவல்களை முகாமைத்துவப்படுத்தி இருந்ததுடன், 2012 ஆண்டு முதல் சுகாதார அமைச்சின் கீழ் காணப்படும் 82 நிறுவனங்களை தொடர்புபடுத்தி Medical Supply Management System(MSMIS) முறைமையின் முதலாம் கட்டம் நிறுவப்பட்டிருந்தது. அமைச்சரவை தீர்மானத்தின் படி அந்த முறைமை பிராந்திய வைத்தியசாலை மட்டம் வரை விரிவுபடுத்தும் செயற்திட்டம் (MSMIS Expansion Project) 2017 ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு 2020 ஆண்டில் பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்ததுடன், மதிப்பீட்டு மொத்தக் கிரயம் ரூபா 954 மில்லியன் தொகையாக காணப்பட்டது. 2021 மார்ச் 31 திகதி வரை உள்ளவாறான செலவு ரூபா 309.88 மில்லியன் தொகை மாத்திரம் காணப்பட்டமையால் நிதி முன்னேற்றம் 32 சதவீதம் போன்ற குறைந்த நிலைமையில் காணப்பட்டது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோக த்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இந்த தகவல்கள் முறைமை 571 சுகாதார நிறுவனங்களில் நிறுவுவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் 2021 மார்ச் 31 திகதி வரை 140 நிறுவனங்களில் மாத்திரம் நிறுவும் விடயங்கள் பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன், மேலும் 337 நிறுவனங்களில் முறைமை நிறுவப்பட்டு வருகின்றது என அவதானிக்கப்பட்டது. அதன்படி அத் திகதியில் உள்ளவாறு முறைமை நிறுவுவதற்கு ஆரம்பிக்கபட்டிருக்காத நிறுவனங்களின் எண்ணிக்கை 94 ஆகும். மேலும், முறைமைக்கு தேவையான மதிப்பிடப்பட்ட கணினிகளின் எண்ணிக்கை 1,550 தொகை எனினும் 2021 மார்ச் 31 திகதி அளவில் 863 கணினிகள் மாத்திரம் வழங்கப்பட்டிருந்தன. | கிடைத்திருந்த அமைச்சரவை அங்கீகாரத்தின் படி அனைத்து மாகாண பொது வைத்தியசாலைகள், ஆதார வைத்தியசாலைகள் மற்றும் பிராந்திய வைத்தியசாலைகள் ஆக 571 நிறுவனங்களுக்காக MSMIS முறைமை தொடர்பு வழங்குவதற்கு திட்டமிடப்பட்டிருந்ததெனவும், 1,550 கணினிகள் தேவைப்பட்டிருந்த போதிலும் 2018 ஆண்டு கிடைத்திருந்த பாதீட்டு ஏற்பாடுகள் ரூபா 200 மில்லியன் மாத்திரம் காணப்பட்டமையால் 571 நிறுவனங்களுக்காக கணினிகள், அச்சு இயந்திரங்கள், UPS இயந்திரங்கள் பெற்றுக்கொள்வதற்காக அந்த ஏற்பாடுகள் போதியளவாக காணப்படவில்லை எனவும், அதன் காரணமாக 258 நிறுவனங்களுக்காக 650 கணினிகள் உட்பட உபகரணங்கள் கொள்வனவு | செயற்திட்டத்தில் செயலாற்றுகையை நெருங்குவதற்காக திட்டமிடல், செயற்படுத்துதல் மற்றும் மேற்பார்வை செய்தல் தொடர்பான பொறுப்பு அறுதியாக உத்தியோகத்தர்களுக்கு சாட்டப்பட வேண்டியிருந்ததுடன், ஒதுக்கப்பட்டிருந்த ஏற்பாடுகள் குறிப்பிட்ட காலப்பகுதியில் பயன்படுத்துவதற்கும் அது தொடர்பாக தொடர் செயல் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டது எனவும், தகவல் முறைமையை நிறுவப்பட்டு பூர்த்தி செய்யப்பட்டிருந்த நிறுவனங்களின் எண்ணிக்கை 140 தொகை மாத்திரம் காணப்பட்ட போதிலும் மேலும் 337 நிறுவனங்களின் தகவல் முறைமை நிறுவும் வேலைகளின் சுமார் 55 சதவீதமும் மீதியான 90 நிறுவனங்களில் தகவல் முறைமை நிறுவும் வேலைகள் 15 சதவீதம் மாத்திரமும் பூர்த்தி செய்யப்பட்டிருந்தன எனவும், மற்றும் அந்த மீதி வேலைகளை பூர்த்தி செய்வதற்காக 2020 ஜுன் 30 திகதி வரை மேலதிக காலம் ஒன்று விண்ணப்பிக்கப்பட்டுள்ளது எனவும். | |
| (ஆ) | முறைமையை நடாத்திச் செல்வதற்காக தேவையான பயிற்சி வழங்கலுக்காக நிச்சயிக்கப்பட்ட வேலைத்திட்டம் ஒன்று இனங்கண்டிருக்காததுடன் முகாமைத்துவத்திற்கு தேவையான தகவல்கள் அறிக்கைகள் மற்றும் படிவங்கள் தொடர்பாக பூர்வாங்க இனங்காணல் ஒன்றும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அவ்வாறான தேவைகளுக்காக நிகழ்ச்சித் திட்ட வழங்கீட்டாளர் ஒருவரின் உதவியை பெற்றுக்கொள்ளல் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் அதற்காக நீண்டகால தீர்வுகள் இனங்கண்டிருக்கவில்லை. | தற்போது 650 உத்தியோகத்தர்கள் MSMIS பயன்படுத்துவது தொடர்பாக பயிற்சி வழங்கப்பட்டிருந்ததெனவும் மேலும் சுமார் 950 உத்தியோகத்தர்களுக்கு பயிற்சி வழங்களுக்காக மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அங்கீகாரத்துக்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அதில் ஒரு பகுதிக்காக அங்கீகாரம் கிடைத்திருந்ததெனவும், மேலும் அங்கீகாரம் கிடைத்திருந்த பகுதியில் சுமார் 120 உத்தியோகத்தர்கள் தற்போது பயிற்சி வழங்கல் பூர்த்தி செய்யப்பட்டிருந்ததெனவும், ஒவ்வொரு பிரிவுகளில் பாவணையாளர்களினால் விண்ணப்பிக்கப்பட்டிருந்த ஒவ்வொரு நாளும் பயன்படுத்தும் கணினி அறிக்கைகள் தற்போது தயாரிக்கப்பட்டு அவை அவர்களுக்கு பெற்றுக்கொள்ளக்கூடியவாறு முறைமைக்கு | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | | உட்படுத்தப்பட்டுள்ளது என. மற்றும் கணக்குப் பிரிவிற்கு, முகாமைத்துவத்திற்கு, கணக்காய்வுப் பிரிவிற்கு மற்றும் ஏனைய பிரிவுகளுக்கு தேவையாக தகவல்கள் பகுப்பாய்வு செய்வதற்கு தேவையான விஷேடத்துவ கணினி அறிக்கை நிகழ்ச்சித் திட்டங்கள் வழங்கீட்டாளர் ஒருவரினால் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு தயாரிக்கப்பட்டு (develop) வழங்குவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என. | |
| (இ) | மருத்துவ வழங்கல் பிரிவின் பிரதி பணிப்பாளர் நாயகத்தின் 2019 ஜூலை 08 திகதிய MSD/ICT/MSMIS-LP/2019 இலக்கம் கொண்ட கடிதத்தின் படி, 2019 ஜூன் 06 திகதி முதல் மருத்துவ வழங்கல்கள் முகாமைத்துவ முறைமை (MSMIS) தொடர்புபடுத்தியுள்ள நிறுவனங்களினால் மேற்கொள்ளப்படும் பிராந்திய கொள்வனவு அந்த முறைமையின் ஊடாக மாத்திரம் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்தது. எனினும், பேராதனை போதனா வைத்தியசாலை அந்த முறைமையின் மூலம் மருத்துவ வழங்கல் பிரிவிற்கு அனுப்பப்பட்டிருந்த கோரிக்கைகளுக்காக (LP Request) பல்வேறு காரணங்களினால் அங்கீகாரம் வழங்குவது தாமதமாக இருந்தது. அந்த அங்கீகாரம் கிடைக்கும் வரை கைமுறை செயற்பாடு(Manual) மூலம் வழங்குனர்களிடம் விலைகூறல் அழைக்கப்பட்டு தெரிவு செய்யப்பட்ட வழங்குனருக்கு கட்டளைகள் வழங்குதல் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், அங்கீகாரம் கிடைத்த பின்னர் கைமுறை(Manual) செயற்பாடு மூலம் கணினி முகாமைத்துவ முறைமைக்கு உட்படுத்துதல் மேற்கொள்ளப்பட்டு இருந்தது. அதன்படி | கணினி முறைமை ஊடாக இவ் விடயம் மேற்கொள்ளும் போது கணினி முறைமையில் சில வித்தியாசங்கள் மேற்கொள்ள நேரிட்டிருந்தமையால் இதனை உரிய முறையில் செயற்படுத்தியது 2019 ஆகஸ்ட் 01 திகதி முதல் மற்றும் அதன் பின்னர் கணினி முறைமை ஊடாக மருந்துப் பட்டியலகள் பதிவேட்டில் காணப்படும் விடயங்கள் பிராந்திய கொள்வனவு செய்வதற்கு தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றன என. | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | அங்கீகரிக்கப்படாத மருத்துவ வழங்கல்கள் தொடர்பான கொடுக்கல் வாங்கல்கள் கணினி முறைமைக்கு உட்படுத்தப்படல் மேற்கொள்ளப்படவில்லை என அவதானிக்கப்பட்டது. | | |
| (ஈ) | சுகாதார அமைச்சின் கீழ் காணப்படும் வைத்தியசாலைகள், பிராந்திய மருத்துவ வழங்கல் பிரிவுகள் (RMSD), ஆதார வைத்தியசாலைகள், பிரதேச வைத்தியசாலைகள், ஆரம்ப உபசரணை அலகுகள் 866 இற்கான மருந்துகள் களஞ்சியப்படுத்துவதற்கு தேவையான இட வசதிகளை அதிகரித்தல், பழைய மருந்தககங்களை நவீனமயப்படுத்துதல், களஞ்சிய ஏந்தான முறைமை மற்றும் ஏனைய தேவையான உபகரணங்கள் வழங்குதல் தொலை தொடர்பு சாதனங்கள், குளிரறைகள் மற்றும் போக்குவரத்து வசதிகள் அபிவிருத்தி செய்யும் குறிக்கோளுடன் மதிப்பீட்டுக் கிரயம் ரூபா 712.08 மில்லியன் தொகைக்கான அரசாங்க வைத்தியசாலைகள் மற்றும் சுகாதார நிறுவனங்களின் மருந்துக் களஞ்சிய வசதிகளை வலுப்படுத்தும் செயற்திட்டத்திற்காக 2017 மார்ச் 29 திகதி அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்திருந்தது. இதற்காக மருத்துவ வழங்கல் பிரிவிற்கு 2020 ஆண்டின் போது ரூபா 86.23 மில்லியன் தொகை மற்றும் 2021 ஆண்டின் போது ரூபா 305 மில்லியன் தொகை என மொத்தம் ரூபா 391.23 மில்லியன் தொகைக்கான ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்ததுடன், மருத்துவ வழங்கல் பிரிவினால் அவற்றில் ரூபா 315 மில்லியன் தொகை 91 நிறுவனங்களுக்கு மாத்திரம் வழங்கப்பட்டிருந்தது. அந்த 91 வைத்தியசாலைகளுக்கும் விண்ணப்பிக்கப்பட்ட மொத்த ஏற்பாடுகளும் வழங்கப்பட்டிருந்த போதிலும் 2021 மே மாதம் வரை உரிய நவீனமயப்படுத்தும் விடயங்கள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | சுகாதார அமைச்சின் கீழ் காணப்படும் வைத்தியசாலைகள், பிராந்திய மருத்துவ வழங்கல் பிரிவுகள் (RMSD), ஆதார வைத்தியசாலைகள், பிரதேச வைத்தியசாலைகள், ஆரம்ப உபசரணை அலகுகள் 866 இற்கான மருந்துக் களஞ்சியங்கள் நவீனமயப்படுத்தல் ஆகிய செயற்திட்டத்திற்காக ரூபா 86.23 மில்லியன் கிடைத்திருந்ததுடன், அதன் மூலம் 31 நிறுவனங்களுக்கு ஏற்பாடுகள் வழங்கப்பட்டதெனவும், குறிப்பிட்ட விடயங்களை மேற்கொள்ளுவதை மேற்பார்வை செய்தல் மற்றும் தொடர் நடவடிக்கை குறிப்பிட்ட பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளர் அல்லது நிறுவனத் தலைவர்களினால் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்தது என, அதன்கீழ் சில சுகாதார நிறுவனங்கள் முழுமையாக வேலைகளை பூர்த்தி செய்திருந்ததெனவும், 2021 ஆண்டிற்காக வழங்கியிருந்த ஏற்பாடுகள், 91 சுகாதார நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டதெனவும், 2021 திசெம்பர் 31 திகதிக்கு முன்னர் மேற்கூறிய உத்தியோகத்தர்களினால் இவ்விடயங்களை பூர்த்தி செய்து மருத்துவ வழங்கல் பிரிவிற்கு அறிவிக்க வேண்டும் என மற்றும் 2021 ஆண்டு மே மாதம் அளவில் இவ்விடயங்கள் பூர்த்தி செய்யப்பட்டிருக்காத போதிலும் 2021 திசெம்பர் 31 திகதி அளவில் இவ்விடயங்கள் | செயற்திட்டத்தின் செயலாற்றலை நெருங்குவதற்கு திட்டமிடல், செயற்படுத்துதல் மற்றும் மேற்பார்வை செய்தல் தொடர்பான பொறுப்பு அறுதியாக உத்தியோகத்தர்களுக்கு சாட்டப்பட வேண்டியதுடன், ஒதுக்கப்பட்டிருந்த ஏற்பாடுகள் குறிப்பிட்ட கால வரையரையில் பயன்படுத்துவதற்கும் அது தொடர்பாக தொடர் நடவடிக்கை எடுப்பதற்கு செயற்பட வேண்டும். |

பூர்த்தி செய்யப்பட தீர்மானிக்கப்பட்டுள்ளது என.

### 3.4 பெறுகைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மருத்துவ வழங்கல் பிரிவினால் மதிப்பிடப்பட்ட மருத்துவ வழங்கல் கொள்வனவு செய்வதற்காக 11 மாதம் வழங்கல் காலத்துடன் அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்திற்கு கட்டளைகள் சமர்ப்பித்தல் கொள்கை ஒன்றாக இருந்த போதிலும் தாமதம் இன்றி மருத்துவ வழங்கல்களை பெற்றுக்கொடுப்பதற்கு அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்திற்கு இயலாமல் இருந்தது. 2020 ஆண்டிற்கான அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த கட்டளைகள் எண்ணிக்கையின் சுமார் 80 சதவீதம் உரிய நேரத்தில் வழங்கப்பட்டிருக்கவில்லை. அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்தினால் 2019 ஆண்டிற்கான பெறுகை விடயங்கள் ஆரம்பிக்கப்பட்டிருந்த 09 மருந்து விடயங்கள் தொடர்பாக பெறுகை அலுவல்களுக்காக 09 மாதங்கள் முதல் 21 இடைப்பட்ட வரையான காலம் செலவிடப்பட்டிருந்ததுடன், 2019 ஆண்டின் பெறுகை அலுவல்கள் ஆரம்பிக்கப்பட்டு அமைச்சின் பெறுகைக் குழுவிற்காக சுகாதார அமைச்சிற்கு அனுப்பப்பட்டிருந்த 16 மருந்து விடயங்கள் தொடர்பாக பெறுகைகள் மீதான பெறுகைக் குழு தீர்மானம் வழங்குவதற்கு அப்பிரிவினால் 04 மாதங்கள் முதல் 13 மாதங்கள் வரை இடைப்பட்ட காலம் செலவிடப்பட்டிருந்தது. பெறுகைச் செய்முறைக்காக திட்டமிடப்படும் காலத்தை விட கூடிய காலம் பல்வேறு அடுக்குகள் செலவிடப்படுவதற்கு மற்றும் வழங்குனரின் தாமதம் மருத்துவ வழங்கல்கள் வழங்குவதால் தாமதத்திற்கான காரணமாக இருந்த போதிலும் அந்த காரணங்களை உரிய முறையில் இனங்காண்பதற்கு மற்றும் | மருத்துவ வழங்கல் பிரிவினால் உரிய காலத்தில் மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு தேவையான கட்டளைகளை உரிய நேரத்தில் அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்படுவதுடன், தொழில்நுட்ப மதிப்பீட்டு குழுக்களின் அறிக்கை தாமதம் அடைதல், பெறுகைத் தீர்மானங்கள் சவாலுக்கு ஆளாகுதல், மேன்முறையீடுகள் சமர்ப்பிக்கப்படல் மற்றும் வழங்குனர்களின் குறைபாடு காரணமாக பெறுகை செய்முறைக்காக நீண்டகாலம் செலவிடப்படும் சந்தர்ப்பங்கள் காணப்படுவது எனவும், தொடர்ச்சியாக முன்னேற்றத்தை மீளாய்வு செய்வதன் மூலம் அந் நிலைமையை கூடியளவு தவிர்த்துக் கொள்வதற்காக நடவடிக்கை எடுக்கப்படுகின்றன எனவும், பெறுகை அலுவல்களின் ஒருங்கிணைப்பின் போது தாமதங்களை குறைப்பதற்காக மருந்துகள் மற்றும் அறுவை சிகிச்சை பண்டங்களுக்காக வெவ்வேறு நிரந்தர பெறுகைக் குழுக்கள் நியமனம் செய்வதற்கும், நிரந்தர அமைச்சரவை பெறுகைக்குழு நிதியமைச்சுடன் இணைந்து மாதாந்தம் பெறுகைகளை மீளாய்வு செய்வதற்கும் நடவடிக்கை | மருத்துவ வழங்கல்களை வழங்கும் போது தாமதத்திற்கான காரணங்களை மீளாய்வு செய்து தாமதத்தை குறைப்பதற்கு பரிகாரம் காண்பதற்கும், அதற்காக அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்தின் மற்றும் அமைச்சின் பெறுகைக்குழு மற்றும் தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழுக்களின் கவனத்திற்கு சமர்ப்பிப்பதற்கு மற்றும் தேவைக்கேற்ற வகையில் திட்ட முறைகளை இனங்கண்டு செயற்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கவேண்டியதுடன் உள்நாட்டு சந்தையில் கொள்வனவுகளை இயன்றளவு குறைக்க வேண்டும். |

தாமதங்களை குறைத்துக் கொள்வதற்கு பொறுத்தமான நடவடிக்கைகளை எடுத்திருக்கவில்லை. இந்த தாமதம் காரணமாக எல்லா ஆண்டுகளிலும் மிகவும் பாரிய கிரயத்தை உடைய மருத்துவ வழங்கல்கள் உள்நாட்டுச் சந்தையில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. மீளாய்வாண்டில் மாத்திரம் உள்நாட்டுச் சந்தையில் இருந்து கொள்வனவு செய்திருந்த மருத்துவ வழங்கல்களின் மொத்தக் கிரயம் ரூபா 6,265 மில்லியன் தொகையாக இருந்தது.

(ஆ) வைத்தியசாலைகள் மற்றும் பல்கலைக்கழகங்கள் உட்பட 21 நிறுவனங்களினால் COVID – 19 வைரஸை இனங்காணும் PCR பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், மருத்துவ வழங்கள் பிரிவு, மருத்துவ வழங்கள் பிரிவுக்காக அரச மருந்தகக் கூட்டுத்தாபனம் வைத்தியசாலைகள் மற்றும் சுகாதார நிறுவனங்களினால் அப்பரிசோதனைகளுக்கு தேவையான 1,482 தொகை PCR Kit பல்வேறு கூறுவிலைகளில் கொள்வனவு செய்வதற்கு ரூபா 762.96 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது. மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் படி பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) ஒவ்வொரு வைத்தியசாலைகள் மற்றும் சுகாதார நிறுவனங்களில் காணப்படும் PCR இயந்திரங்களின் வகை எவை எனவும், அந்த இயந்திர வகைக்கு பொருத்தமான PCR Kit வகை எவை என ஆகிய விடயங்களை பகுப்பாய்வு செய்து சரியான நியமக் குறியீட்டில் தயாரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், 2020 ஏப்ரல் மாதத்தில் மேற்கொள்ளப்பட்ட பெறுகையின் போது அவ்வாறு செயற்பட்டிருக்காமையால் மற்றும் நியமக் குறியீடுகள் என உட்படுத்தப்பட வேண்டிய முக்கிய காரணிகளான approved CE IVD or equivalent, should have 2 SARS

எடுக்கப்படுகின்றன என.

கொவிட் தொற்றுநோய் ஆரம்பித்தில் ஏற்பட்ட அவசர நிலைமை காரணமாக அப்போதிருந்த நியமக் குறியீடுகளின் மீது அவசரக் கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட்டது எனவும், 2020 மே மாதம் அளவில் தேவையான நியமக் குறியீடுகள் தயாரிக்கப்பட்டது எனவும்.

வைத்தியசாலைகளில் காணப்பட்ட PCR இயந்திரங்களுக்காக நேரொத்த PCR Kit வகை எவை மற்றும் அதன் தேவையினை உரிய முறையில் ஆய்வு செய்து இனங்கண்டு தொழில்நுட்ப நியமக் குறியீடுகள் தயாரிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட வேண்டியதுடன் அதற்காக பெறுகை அலுவல்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| | Co V 2 RNA targets, should have an extraction control preferably an endogenous human gene target, compatible with a wide range of thermal cyclers உட்படுத்தாமல் விலைகூறல்கள் அழைக்கப்பட்டிருந்தன. | | |
| (ii) | பதிலளிக்கப்பட்ட குறைந்த விலைகூறல் சமர்ப்பித்திருந்த கூறுவிலைதாரர்களினால் பெறுகைக்காக திட்டமிடப்பட்டிருந்த PCR Kit வகை, காணப்படும் PCR இயந்திரங்களுக்கு பொருத்தமாக இருக்கவில்லை எனவும் அல்லது சமமான பரிசோதனை மேற்கொள்வதற்கு முடியாமல் உள்ளது எனக் குறிப்பிடப்பட்டு அவசர தேவைகள், கடந்த கால அனுபவங்கள் மற்றும் மருத்துவ பரிசோதனை நிலையத்தினால் (MRI) பயன்படுத்தப்படும் வகை ஆகிய விடயங்களை அடிப்படையாக கொண்டு ஒரு கம்பனிக்கு அனுகூலமாகும் வகையில் தொழில்நுட்ப மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. அதேபோல் அமைச்சின் விஷேட பெறுகைக் குழுவினால் தொழில்நுட்ப மதிப்பீடு செய்யும் போது பரிந்துரைக்கப்பட்ட விலைகூறல்தாரர்களின் PCR Kit வகை சுகாதார அமைச்சின் கீழ் காணப்படும் நிறுவனங்களினால் பயன்படுத்தப்படுகின்றன என நியாயப்படுத்தி PCR Kit ஒன்றிற்காக கூடிய விலை சமர்ப்பித்திருந்த விலைகூறல்தாரருக்கு ஒப்பந்தத்தை வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. | மருத்துவ வழங்கல்கள் பிரிவினால் இரண்டு சந்தர்ப்பங்களில் PCR Kit களுக்காக கூறுவிலை அழைக்கப்பட்டு அந்த கூறுவிலைகள் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவிற்கு சமர்ப்பித்து தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் பரிந்துரையின் படி பெறுகை குழுவிற்கு சமர்ப்பித்து பெறுகை குழுவின் அங்கீகாரத்தின் படி கொள்வனவு செய்தல் மேற்கொள்ளப்படுகின்றன என. | அரசாங்க பெறுகை வழிகாட்டல்களின் பிரகாரம் செயற்பட வேண்டியிருந்ததுடன், பதிலளிக்கப்பட்ட குறைந்த விலைகூறல்தாரர்களை வெளிப்படைத் தன்மையுடன் தெரிவு செய்யப்பட வேண்டும். |
| (iii) | PCR Kit ஒன்றிற்காக சந்தை விலை ரூபா 1,850 தொகை என்பதை கவனத்தில் எடுக்காமல் மருத்துவ வழங்கல்கள் பிரிவு மற்றும் மருத்துவ வழங்கல் பிரிவிற்கு பதிலாக அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்தினால் | - மேற்படி - | அரச பெறுகை வழிகாட்டல் கோவைக்கு முரணாக செயற்பட்டிருந்தமையால் ஏற்பட்டிருந்த நிதிசார் நட்டத்தினை பொறுப்புச் சொல்ல வேண்டிய அலுவலர்களிடம் அறவீடு |

| | | | |
|---|---|---|---|
| | 03 சந்தர்ப்பங்களில் அதனை விட கூடிய கூறுவிலைகளில் 328 PCR Kit கொள்வனவு செய்திருந்தமையால் ஏற்பட்டிருந்த நிதிசார் நட்டம் ரூபா 125 மில்லியன் தொகையாக இருந்தது. | | செய்வதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | சுகாதார அமைச்சுச் செயலாளரின் 2020 பெப்ரவரி 28 திகதிய HS/FR/135/2020 இலக்கம் கொண்ட 2020 நிதி ஆண்டிற்கான நிதிக் கட்டுப்பாடு தொடர்பாக அதிகாரம் கையளிக்கும் கடிதத்தை பிரிவு 19.4 படி மருத்துவ வழங்கல் பிரிவில் மருந்துகள் இன்மையை உறுதிப்படுத்திக்கொண்ட பின்னர் கூறுவிலை அழைப்படும் என நிறுவனத் தலைவரின் அங்கீகாரத்தின் மீது ரூபா 75,000 ற்கான மருந்துகள் கொள்வனவு செய்வதற்கு அதிகாரம் அளிக்கப்பட்டிருந்த போதிலும், அதற்கிணங்க செயற்படாமல் அந்த வரையறை மிகைத்து பேராதனை போதனா வைத்தியசாலையினால் மொத்தக் கிரயம் ரூபா 1.82 மில்லியன் தொகைக்கான மருந்து மற்றும் அறுவைச் சிகிச்சை நுகர்வுப் பண்டங்கள் (Surgical Consumables) 07 விடயங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. | வரையரைகளை மிகைத்து மருந்துகள் கொள்வனவு செய்யக்கூடாது என உத்தியோகத்தர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது என. | நிதிக் கட்டுப்பாடு தொடர்பாக அதிகாரம் கையளிக்கப்படும் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிதி வரையறைகளை மிகைத்து கொள்வனவு செய்தல் மேற்கொள்ளப்படக்கூடாது. |
| (ஈ) | பேராதனை போதனா வைத்தியசாலையில் அவசர கொள்வனவின் போது விலைகள் விசாரணை அலுவல்கள், மதிப்பீடு செய்தல் மற்றும் பரிந்துரை வழங்கல் உட்பட அனைத்து பெறுகை நடவடிக்கைகளும், வைத்தியசாலையின் பிரதான மருந்தாளரினால் மேற்கொள்ளப்படுகின்றமையால் அந்த பெறுகை நடவடிக்கைகளுக்காக முறையான உள்ளக கட்டுப்பாட்டு நடைமுறைகள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக தவறுகள் மற்றும் மோசடிகள் ஏற்படக்கூடிய உள்ளார்ந்த பாதிப்பு ஏற்படக்கூடும் என அவதானிக்கப்பட்டது. | போதியளவு பதவியணியினர் இன்மையால் உள்ளகக் கட்டுப்பாடு நடைமுறை பலமடைந்து காணப்படாததுடன் மற்றும் தேவையான உத்தியோகத்தர்கள் சேர்க்கப்பட்டு முறையான உள்ளகக் கட்டுப்பாட்டு நடைமுறை ஒன்றின்படி செயற்படுவதற்கு உரிய உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது என. | அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் பிரகாரம் செயற்பட்டு பெறுகை நடவடிக்கைகளுக்காக முறையான உள்ளகக் கட்டுப்பாட்டு நடைமுறை ஒன்றினை அறிமுகப்படுத்த வேண்டும். |

**3.5 முறைசாரா கொடுக்கல் வாங்கல்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோக த்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பெறுமதி கூட்டிய வரிக்காக பதிவு செய்யப்பட்டிருக்காத மருத்துவ வழங்கல் பிரிவின் திகன உப களஞ்சியத்தின் மறுசீரமைப்பு அலுவல்கள் சாட்டப்பட்டிருந்த ஒப்பந்தக்காரர்களுக்கு ரூபா 398,663 தொகை பெறுமதி கூட்டிய வரி செலுத்தப்பட்டிருந்தது. | உசாத்துணை சேவை நிறுவனமாகிய பொறியியல்சார் கருமங்களுக்கான மீதான மத்திய பொறியியல் ஆலோசனைப் பணியகத்தினால் கொடுப்பனவு சான்றிதழ்கள் வழங்கும் போது பெறுமதி கூட்டியவரி உட்பட தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்தமையால் கட்டடம் விடயம் தொடர்பான உத்தியோகத்தர்கள் மற்றும் கணக்குப் பிரிவின் கொடுப்பனவிற்கு பொறுப்பான உத்தியோகத்தர்கள் ஆகியோர்களினால் தவறுதலாக ஒப்பந்த நிறுவனத்திற்கு பெறுமதி கூட்டிய வரி செலுத்தப்பட்டது எனவும், மற்றும் அத் தொகை ஒப்பந்த வேலையின் தடுத்து வைத்தல் பணத்திலிருந்து ரூபா 303,882 தொகையும் மற்றும் இறுதி பில் பத்திரத்தில் இருந்து அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும், இவ்வாறான தவறுகள் எதிர்காலத்தில் ஏற்படாமல் இருக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும். | ஒப்பந்தக்காரரிடம் அல்லது பொறுப்புச் சொல்ல வேண்டிய உத்தியோகத்தர்களிடம் மிகையாக செலுத்தியிருந்த தொகையினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | மருத்துவ வழங்கல் பிரிவில் கணக்கு அலகு நிர்மாணிக்கும் வேலை பூர்த்தி செய்தல் 306 நாட்களினால் தாமதித்தல் தொடர்பாக உடன்படிக்கையின் பிரகாரம் ரூபா 307,884 இற்கான தாமதக் கட்டணம் அறவீடு செய்திருக்காததுடன் அங்கீகரிக்கப்பட்டிருக்காத 03 முரண்களுக்காக ரூபா 3.93 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தது. | தேவையின் அடிப்படையில் கணியப்பட்டியலில் ஏற்பட்டிருந்த வித்தியாசத்தின் மீது மற்றும் மேலதிக வேலைகளுக்கான மொத்த முரண்கள் ரூபா 3.93 மில்லியன் தொகை எனினும் கணியப் பட்டியலின் படி ஏற்பட்டிருந்த முரண்களின் பெறுமதியில் இருந்து ஆரம்ப கணியப் பட்டியலில் அவ்விடயத்திற்கான பெறுமதி சேமிப்பு என குறைத்த பின்னர் மொத்த முரண் ரூபா 1.43 மில்லியன் தொகை மாத்திரம் என. | தாமதக் கட்டணம் அறவீடு செய்வதற்கு மற்றும் அங்கீகரிக்கப்படாத முரண்களுக்காக அங்கீகாரம் பெறுவதற்கு அல்லது பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.6 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மருத்துவ வழங்கல் பிரிவினால் பயன்படுத்தப்படும் மொத்த வாகனங்களின் எண்ணிக்கை 51 ஆக காணப்பட்டதுடன் அந்த எந்த வாகனத்தினதும் பதிவு செய்யப்பட்ட உரிமை இராஜாங்க அமைச்சுக்கு உரித்தாக்கப்பட்டிருக்கவில்லை. 2016 திசெம்பர் 29 திகதிய இலக்கம் 30/2016 கொண்ட பொது நிருவாகச் சுற்றறிக்கையின் பந்தி 3.1 பிரகாரம் எரிபொருள் பரிசோதனை மேற்கொண்டிருக்கவில்லை.<br>அதேபோல் 04 லொறி வண்டிகளுகளின் திருத்த வேலைக்காக ரூபா 2.51 மில்லியன் அங்கீகாரம் கிடைக்கப் பெற்று 1½ வருடங்கள் கடந்திருந்த போதிலும் இத்திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | மருத்துவ வழங்கல் பிரிவினால் பயன்படுத்தப்படுகின்ற 51 வாகனங்கள் சுகாதார அமைச்சில் இருந்து இராஜாங்க அமைச்சுக்கு உரித்தாக்குவதற்கு விரைவாக உரிய நடவடிக்கை எடுக்கப்படும் எனவும், மருத்துவ வழங்கல் பிரிவிற்கு சொந்தமான வாகனங்களின் எரிபொருள் பரிசோதனை மேற்கொண்டு வருவதுடன், Covid – 19 வைரஸ் பரவல் காரணமாக ஊரடங்குச் சட்டம், இடம் பெயரும் எல்லைக் கட்டுப்பாடு மற்றும் நிறுவனங்கள் மூடப்பட்டிருந்த காரணத்தினால் லொறி வண்டிகளின் திருத்த வேலைகள் தாமதமாகின்றது எனவும், தற்போது 02 லொறி வண்டிகள் திருத்த வேலை மேற்கொள்ளப்பட்டு ஓட்ட நிலைக்கு சேர்க்கப்பட்டுள்ளன எனவும். | உரிமையை இராஜாங்க அமைச்சிற்கு உரித்தாக்குவதற்கும், எரிபொருள எரிவு பரிசோதனைகள் மற்றும் திருத்த வேலைகள் உரிய முறையில் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.7 நட்டங்கள் மற்றும் சேதங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிக்கூற்றுக்களில் குறிப்பு (i) இல் காட்டப்பட்டுள்ள தொடர்ந்தும் அறவீடு செய்வதற்கு அல்லது பதிவழிப்பதற்கு காணப்பட்ட நட்டங்கள் தொடர்பாக காலப் பகுப்பாய்வில் 05 வருடங்களுக்கு குறைவான ரூபா 253.39 மில்லியன் தொகைக்கான 60 சம்பவங்கள், 05 வருடங்களுக்கும் 10 வருடங்களுக்கும் இடைப்பட்ட ரூபா 162.83 மில்லியன் தொகைக்கான | 10 வருடங்களை விட குறைந்த காலம் முதல் தொடர்ந்தும் அறவிடப்பட வேண்டிக் காணப்பட்ட அல்லது பதிவழிப்பதற்கு உரிய 269 சம்பவங்கள் தொடர்பான நட்டம் ரூபா 416.22 மில்லியன் தொகையில் 05 சம்பவங்களுக்கான ரூபா 4,479.59 மில்லியன் தொகைக்கான நட்டங்கள் | நிதிப் பிரமாணம் 103 முதல் 108 வரையான பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து குறிப்பிட்ட நட்டத்தை மற்றும் சேதத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 209 சம்பவங்கள் மற்றும் 10 வருடங்களை மிகைத்துள்ள ரூபா 813,400 தொகைகான சம்பவம் 01 ஆக நட்டங்கள் தொடர்பான தகவல்கள் உட்படுத்தப்பட்டிருந்த போதிலும் அந்த நட்டத்தை அறவீடு செய்வதற்கு அல்லது பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | உரிய தரப்பினரிடம் அறவீடு செய்து புத்தகத்தில் இருந்து பதிவழிப்பதற்கு தொடர் நடவடிக்கைக்காக சுகாதார அமைச்சின் கணிப்பீட்டுப் பிரிவிற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது எனவும், 10 வருடங்களை மிகைத்துள்ள சம்பவத்துடன் தொடர்புடைய ரூபா 813,400 தொகைக்கான நட்டம் தொடர்பான ஆரம்ப விசாரணை சபை அறிக்கை சுகாதார அமைச்சின் களஞ்சியக் கணிப்பீட்டுப் பிரிவிற்கு சமர்பிக்கப்பட்டுள்ளதுடன், வெள்ளத்தினால் ஏற்பட்ட சேதம் ரூபா 199.26 மில்லியன் தொகை புத்தகத்தில் இருந்து பதிவழிப்பதற்கு அங்கீகாரத்திற்காக திறைசேரிக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என மற்றும் ஏனைய 264 சம்பவங்கள் தொடர்பாக புத்தகத்தில் இருந்து பதிவழிப்பதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டு வருகின்றது என. | |
| (ஆ) | பேராதனை போதனா வைத்தியசாலையில் அறுவைச் சிகிச்சைக் கூட வளவில் 2020 செப்டம்பர் 04 திகதி அளவில் நீண்ட காலமாக அசையாமல் காணப்பட்ட விடயம் (Non Moving items) எனக் காணப்பட்ட பல்வேறு அளவினைக் கொண்ட Kumtscher Cloverleaf Nail For Femur, 945 துணைக் கருவி அலகுகள் மற்றும் 08 இருப்பு விடயங்களை அகற்றுவதற்கு அல்லது ஏனைய வைத்தியசாலைக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அதேபோல் ரூபா 1,863,211 தொகைக்கான காலவதியான Austin Moore Prosthesis (A.M.H. Prosthesis) 706 துணைக் கருவி அலகுகள் இருப்புப் | புதிய துணைக் கருவிகள் சேகரமாகும் காரணத்தினால் பலவருட காலம் முதல் இடையிடையே பெற்றுக் கொள்ளப்பட்ட இந்த துணைக் கருவிகள் பாவனை தற்போது குறைவடைந்துள்ளதுடன், இந்த துணைக்கருவிகள் விஷேடத்துவ வைத்தியர்களினால் மேற்கொள்ளப்பட்ட கட்டளைகள் மீது களஞ்சியத்துக்கு கிடைகின்றன எனவும், துணைக் கருவி ஒன்று ஆனாலும் அவற்றின் அளவுகளில் (Sizes) காணப்படும் வித்தியாசங்கள் காரணமாக மொத்தத் | உண்மை நுகர்வு மதிப்பீட்டுப் பெறுமதி இடையே முரண்கள் குறையும் விதத்தில் தத்துரூபமாக மதிப்பீடுகள் தயாரிப்பதற்கும், அதன் அடிப்படையில் கட்டளைகள் அனுப்புவதற்கும், மெதுவாக அசையும் விடயங்களில் கேள்வி குறைதல் சம்பந்தமாக தொடர்ச்சியாக ஆய்வொன்று மேற்கொண்டு காலவதியாதலை கூடியளவு குறைத்துக் கொள்வதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். குறுகிய ஆயுட்காலத்துடனான விடயங்களை கொள்வனவு செய்தல் வரையறுக்க |

| | | | |
|---|---|---|---|
| | பதிவேட்டில் உட்படுத்தப்பட்டிருக்கவில்லை. ரிஜ்வே சீமாட்டி வைத்தியசாலையினால் மீளாய்வாண்டின் போது 03 மாதங்களுக்கும் 11 மாதங்களுக்கும் இடைப்பட்ட குறுகிய ஆயுட்காலத்தை உடைய ரூபா 1.37 மில்லியன் தொகை கிரயத்திற்கான 16 மருந்து வகைகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. | தொகையும் அறுவைச் சிகிச்சைக் கூடத்திற்கு வழங்கப்படுகின்றன எனவும், அறுவை சிகிச்சை ஒன்று ஆரம்பிப்பதற்கு முன்னர் எல்லா அளவுகளிலும் (Sizes) கிருமி நீக்கல் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்ததுடன், அவற்றை பிரதான களஞ்சியத்தில் வைத்துக் கொள்ளல் மூலம் அவசர சத்திர சிகிச்சைகளுக்கு பாதிப்புகள் ஏற்படுகின்றன எனவும், இந்த துணைக் கருவிகள் நுகர்வு அறுவை சிகிச்சை பண்டங்கள் (Consumable) இனத்தை சேர்ந்தவை என்பதால் வழங்கிய பின்னர் இருப்புப் பதிவேடொன்று பேணல் மேற்கொள்ளப்படவில்லை என. | வேண்டியிருந்ததுடன், காலவதியாதல் தொடர்பாக பொறுப்புச் சொல்ல வேண்டிய தரப்பினர் காணப்படின் அவரகளிடம் நட்டத்தினை அறவீடு செய்ய வேண்டும். |
| (இ) | சுகாதார, பாதுகாத்தல் மற்றும் போசாக்கு அமைச்சினால் 2008 ஆண்டு வெளியிட்டிருந்த மருந்து முகாமைத்துவ கைநூல் (Manual on Management of Drugs) படி மாவட்ட பொது வைத்தியசாலையில் பயன்படுத்த முடியாத மருந்துகளை காலாண்டு அடிப்படையில் முறைப்பிரகாரம் அப்புறப்படுத்த வேண்டியிருந்த போதிலும் பொலன்னறுவை மாவட்ட பொது வைத்தியசாலையில் 2016 ஆண்டு முதல் 2021 ஆண்டு வரை அவ்வாறு அப்புறப்படுத்தல் அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன், அநுராதபுரம் போதனா வைத்தியசாலையில் 2015 திசெம்பர் 31 திகதியளவில் காலவதியாகிய ரூபா 10.19 மில்லியன் கிரயத்தை உடைய 84 வகையும் 2021 ஜனவரி 31 திகதி வரை அப்புறப்படுத்துவற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன் எனவும், கடந்த காலங்களில் இலங்கை மருந்தகக் கூட்டுத்தாபனத்தினால் தரம் குறைந்த மருந்துகளை அப்புறப்படுத்தும் போது ஏற்பட்ட சிக்கல் காரணமாக அப்புறப்படுத்தல் தாமதமாகியிருந்ததெனவும், தற்போது இந்த அப்புறப்படுத்தல் அலுவல்களை விரைவு படுத்துவதற்காக தேவையான ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன எனவும். | மருந்து முகாமைத்துவ கைநூலின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

## 3.8 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோக த்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது சுகாதார அமைச்சின் கீழுள்ள வைத்தியசாலைகள் மற்றும் சுகாதார நிறுவனங்களுக்காக வெளிநாடுகளில் இருந்து கிடைத்திருந்த வெகுமதிகளை விடுவிப்பதற்காக மருத்துவ வழங்கல் பிரிவினால் 152 சந்தர்ப்பங்களில் ரூபா 294.86 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது. சுகாதார அமைச்சினால் அங்கீகாரம் வழங்குவதில் தாமதம், ஆவனங்கள் சமர்ப்பிப்பதில் தாமதம், தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் அங்கீகாரம் பெறுவதில் தாமதம், நிதி ஏற்பாடுகள் கிடைப்பதில் தாமதம், இறக்குமதி ஏற்றுமதி கட்டுப்பாட்டு திணைக்களத்தின் அங்கீகாரம் பெறுவதில் தாமதம் ஆகிய விடயங்களின் காரணமாக அந்த வெகுமதிகளை விடுவிக்கும் போது தாமதக் கட்டணம் என ரூபா 16.98 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன், விடுவிக்கும் பணிப்பொறுப்பு உரிய முறையில் திட்டமிடப்படாமையால் அவற்றில் 04 சந்தர்ப்பங்களில் ரூபா 8.1 மில்லியனிற்கான தாமதக் கட்டணம் ஒன்று செலுத்துவதற்கு நேரிட்டிருந்தது. | UNICEF நிறுவனத்தினால் வழங்கப்படும் வெகுமதிகள் மாத்திரம் பூர்வாங்க அறிவித்தலுடன் கிடைப்பதுடன், அந்த வெகுமதிகளை விடுவிக்கும் போது கணிசமான தாமதக் கட்டணம் ஒன்று செலுத்துவதற்கு நேரிட்டிருக்கவில்லை எனவும், பூர்வாங்க அறிவித்தல் இன்றி வெகுமதிப் பொருட்கள் விமான நிலையத்திற்கு மற்றும் துறைமுகத்திற்கு கிடைத்த பின்னர் அது தொடர்பாக அறிவிக்கப்பட்டதும் விடுவித்தல் விடயங்கள் ஆரம்பிக்கப்படுகின்றது எனவும், ஆவணங்களை தயாரித்து உரிய அங்கீகாரம் பெற்றுக்கொள்வதற்காக கணிசமான காலம் ஒன்று எடுக்கப்படுகின்றமையால் தாமதக் கட்டணம் ஒன்று செலுத்துவதற்கு நேரிடுகின்றது எனவும், மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையில் அங்கீகாரத்தை பெறுவதற்காக சுமார் 02 வார காலமும், இறக்குமதி ஏற்றுமதி கட்டுப்பாட்டாளரிடம் அனுமதிப்பத்திரம் பெறுவதற்காக சுமார் ஒரு வார காலமும், அண்ணியச் செலாவணி அங்கீகாரம் பெறுவதற்காக ஒரு வார காலமும், இறக்குமதி அனுமதிப்பத்திரத்தை வரவு வைப்பதற்காக சுமார் ஒரு வார காலமும், இறக்குமதி அனுமதிப் பத்திரம் பெற்றுக்கொள்ளாமல் பண்டங்கள் இறக்குமதி செய்வதால் செலுத்துவற்கு நேரிடுகின்ற தண்டப் பணத்தை அகற்றுவதற்காக மேலும் கணிசமான ஒரு காலமும் செலவிடப்படுகின்றதென 2020 மார்ச் மாதம் முதல் கொரோனா | வெளிநாடுகளில் இருந்து கிடைகின்ற வெகுமதிகளை விடுவித்தலில் ஏற்படும் தாமதிப்பதை குறைத்துக்கொள்ள வேண்டும். |

| | | |
|---|---|---|
| | தொற்றுநோய் காரணமாக நாடு மூடப்பட்டு காணப்பட்ட காரணத்தினால் விமான கம்பனிகள் அலுவலகங்கள், கப்பல் கம்பனி அலுவலகங்கள் மற்றும் உள்நாட்டு இறைவரி திணைக்கள சேவை அலுவலகம் மூடப்பட்டு காணப்பட்ட காரணத்தினாலும், இறக்குமதி ஏற்றுமதி திணைக்களத்தின் கடமை நேரங்கள் வரையறுக்கப்பட்டு காணப்பட்டமையாலும் சுங்கத் திணைக்களம் மற்றும் துறைமுக அதிகார சபை சேவைகள் வழங்கல் வரையறுக்கப்பட்டிருந்தமையால் தவிர்க்க முடியாத தாமதம் ஒன்று ஏற்பட்டிருந்ததென. | |

**3.9 முகாமைத்துவ பலவீனங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மருத்துவ வழங்கல் பிரிவினால் ஏனைய அரச நிறுவனங்களுக்கு சொந்தமான வைத்தியசாலைகள் மற்றும் நிறுவனங்களுக்கு வழங்கியிருந்த மருந்துகளுக்காக பெறவேண்டியிருந்த 05 வருடங்களை விட காலம் கடந்த கடன் ரூபா 395.50 மில்லியன் தொகையினை அறவீடு செய்வதற்கு உரிய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 2021 ஆண்டு முதல் மருத்துவ வழங்கல் பிரிவினால் மருந்துகள் வழங்கும் நிறுவனங்களுக்கு மாதாந்தம் அறிவித்து நிலுவைத் தொகை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது எனவும், கடந்த ஆண்டுகள் தொடர்பாக அறவிடப்பட வேண்டிய தொகையையும் அறவீடு செய்வதற்கும் தற்போது உரிய நிறுவனங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளன என. | கடன் அறவீடுகள் விரைவு படுத்தப்பட வேண்டும். |

**4. நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்களை நெருங்குதல்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2017 இன் 19 இலக்க நிலைபேறான அபிவிருத்தி சட்டத்தின் 3.6, 3.9, 11 மற்றும் 11.2 ஆகிய குறிக்கோள்களை நெருங்குவதற்காக தமது வளங்களை ஆக்கபூர்வமாக | 2020 ஆகஸ்ட் 09 திகதி நிறுவப்பட்ட புதிய இராஜாங்க அமைச்சு ஒன்றென்பதால் போதிய பதவியணியினர்களை சேர்த்துக் கொள்வற்கு காலம் | நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக உரிய நிகழ்ச்சித் திட்டங்கள் |

| | | |
|---|---|---|
| செயற்படுத்த வேண்டியிருந்தது. எனினும், இந்த அமைச்சினால் அக்குறிக்கோளினை நிறைவேற்றுவதற்கான நிகழ்ச்சித் திட்டங்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | எடுத்ததெனவும் மற்றும் 2017 இன் 19 இலக்க நிலைபேரான அபிவிருத்திச் சட்டத்தின் படி நேரடியாக செயற்பட முடியாது எனினும் அமைச்சிற்கு கிடைத்திருந்த வளங்களை ஆக்கபூர்வமாக செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது என. | தயாரிக்கப்பட்டு செயற்படுத்தப்பட வேண்டும. |

**5 நல்லாளுகை**

**5.1 பொது மக்களுக்கு சேவையாற்றுதல்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோக த்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2016 இன் 12 இலக்க தகவல்கள் அறியும் உரிமை தொடர்பான சட்டத்தின் கீழ் பிரஜைகளினால் பெற்றுக்கொள்ளக்கூடிய தகவல்கள் தொடர்பாக செயற்படுவதற்காக தகவல் உத்தியோகத்தர் ஒருவர் நியமனம் செய்யப்பட்டிருந்த போதிலும் மேல் முறையீடு தொடர்பாக செயலாற்றுவதற்கு உத்தியோகத்தர் ஒருவர் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. | 2020 ஆகஸ்ட் 09 திகதி நிறுவப்பட்ட புதிய இராஜாங்க அமைச்சு ஒன்றென்பதால் போதிய பதவியணியினர் சேர்த்துக் கொள்வற்கு காலம் எடுத்ததெனவும், தகவல் உத்தியோகத்தர் மற்றும் மேல் முறையீட்டு உத்தியோகத்தர் நியமனம் செய்வதற்கு முடியாமல் போனது எனவும் மற்றும் அந்த உத்தியோகத்தர்களை நியமனம செய்யும்படி அறிவுரை வழங்கப்பட்டது எனவும். | தகவல் அறியும் உரிமை தொடர்பான சட்டத்தின் படி செயற்பட வேண்டும். |

**5.2 உள்ளகக் கணக்காய்வு**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோக த்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 40 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க மருந்து உற்பத்தி, வழங்கல் ஒழுங்குபடுத்தல் இராஜாங்க அமைச்சிற்காக உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்று நிறுவப்பட்டிருக்கவில்லை. | பிரதான உள்ளகக் கணக்காய்வாளர் பதவியொன்று மற்றும் கணக்காய்வாளர் இருவர் இந்த அமைச்சின் பதவியணியில் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும், அப்பதவிகளுக்காக உத்தியோகத்தர்கள் நியமனம் செய்யப்பட்டிருக்காமையால் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்று நிறுவுவதற்கு முடியாமல் போனது எனவும் | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 40 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | மற்றும் தேவையான உத்தியோகத்தர்களை பெற்றுக்கொள்வதற்காக பொது நிர்வாக அமைச்சுக்கு விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது எனவும். | |

**5.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2009 ஜூன் 09 திகதிய இலக்கம் DMS/2009(1), 2016 ஜனவரி 28 திகதிய இலக்கம் DMS/2009(1)(i) மற்றும் 2019 ஜனவரி 12 திகதிய இலக்கம் DMS/1-.2019 கொண்ட முகாமைத்துவ கணக்காய்வுச் சுற்றறிக்கையின் படி காலண்டிற்கு 01 என்ற வகையில் ஆண்டிற்கு கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்கூட்டங்கள் 04 நடாத்தப்பட வேண்டியிருந்த போதிலும், அமைச்சு ஆரம்பிக்கப்பட்டு சுமார் 10 மாதங்கள் கடந்திருந்த போதிலும் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டம் ஒன்றேனும் நடாத்தியிருக்கவில்லை. | நிலவுகின்ற கொவிட் 19 நிலைமை கடமையில இருக்கும் காரணமாக உத்தியோகத்தர்களின் வேலைப்பழு காரணமாக பிரதான உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தர் இன்மையாலும் கணக்காய்வு முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடாத்துவதற்கு முடியாமல் போனது எனவும், எதிர்காலத்தில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டங்கள் நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும். | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 41(1) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

**6. மனிதவள முகாமைத்துவம்**

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2020 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மருத்துவ வழங்கல் பிரிவிற்காக அங்கீகரிக்கப்பட்ட 700 பதவிகளில் 209 பதவிகள் வெற்றிடமாக காணப்பட்டதுடன், உதவி / பிரதிப் பணிப்பாளர் (தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப) பதவிகள் 02 உம், உதவிப் பணிப்பாளர் (மருத்துவ வழங்கல்) பதவிகள் 04 உம், விஷேட தர மருந்தாளர் பதவிகள் 02 உம் தகவல் மற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தர் பதவிகள் 06 உம், மருந்து வழங்கல் | சுகாதார அமைச்சிற்கு பதவியணி விபரங்கள் சமர்ப்பிக்கும் போது இந்த வெற்றிடங்கள் அறிவிக்கப்பட்டுள்ளதுடன், வெற்றிடங்களை நிரப்பும் படியும் அறிவிக்கப்பட்டுள்ளது. | தேவையினை கவனத்திற் கொண்டு பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | உதவியாளர் பதவிகள் 45 உம், போக் லிப்ட் இயக்குனர் பதவிகள் 06 உம், பொதியிடுவோர் பதவிகள் 28 உம், களஞ்சியக் காப்பாளர் பதவிகள் 58 உம் பல வருட காலமாக வெற்றிடமாக காணப்படல், மருத்துவ வழங்கல் செய்முறை முறைப்பிரகாரம் மற்றும் வினைத்திறனுடன் நடாத்திச் செல்வதற்கு பாதகமாக இருந்தது என அவதானிக்கப்பட்டது. | | |
| (ஆ) | அங்கிகரிக்கப்பட்ட 03 பதவிகளில் 05 ஊழியர்கள் மிகையாக சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளார்கள். | மேலதிக சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள ஊழியர்கள் 05 பேரின் பதவிகளை அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் உட்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன என. | மிகை ஊழியர்களை அகற்றுவதற்கு அல்லது அங்கீகரிக்கப்பட்ட பதவி எண்ணிக்கையை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | இராஜாங்க அமைச்சு 2020 ஆகஸ்ட் 09 திகதி நிறுவப்பட்டிருந்ததுடன், மொத்த பதவியணியினை சுமார் 82 சதவீதம் வெற்றிடமாக காணப்படல் அமைச்சின் அலுவல்கள் முறைப்பிரகாரம் மற்றும் வினைத்திறனுடன் நடாத்திச் செல்வதற்கு பாதகமாக இருந்ததென அவதானிக்கப்பட்டது. | புதவியணி வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என. | தேவையினை கவனத்திற் கொண்டு பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |